Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 06 வெள்ளிக்கிழமை (22.09.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 297

# இணைத் தலைமையின் செய்தியோடு

# நோர்வேத் தூதுவர் இன்று வன்னிக்கு!

## சாதகமான பதில் கிடைக்க வாய்ப்புக் குறைவு

கொழும்பு, செப்ரெம்பர் 22

இலங்கைக்கு உதவும் மாநாட்டின் இணைத்தலைமைகள் கடந்த 12ஆம் திகதி இலங்கை நிலைமை குறித்து வெளியிட்ட அறிக்கை மற்றும் இணைத்தலைமைகளின் கூட்டத்தில் ஆராயப்பட்ட விடயங்களின் செய்தி ஆகியவற்றோடு கொழும்புக்கான நோர்வே தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் இன்று தரைவழியாக கிளிநொச்சிக்குச் செல்கின்றார்.

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை அவர் சந்திப்பார். எனினும், அமைதி முயற்சிகளை விரைவில் ஆரம்பிப்பதற்கான இணைத்தலைமைகளின் எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் - சாதகமான - பதில் அவருக்கு கிளிநொச்சியில் கிடைப்பதற்கு வாய்ப்புகள் குறைவு என்று விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

வவுனியாவரை ஹெலிக்கொப்டரில் செல்லும் தூதுவர் பிரட்ஸ்கர் தலைமையிலான நோர்வே தூதரகக் குழுவினர், அங்கிருந்து தரைமார்க்கமாக கிளிநொச்சிக்குச் செல்வார் எனத் தெரிகின்றது.

அமைதிப்பேச்சுகளை விரைந்து ஆரம்பிப்பதிலுள்ள முட்டுக்கட்டை, ஏ-9 வீதியூடான போக்குவரத்தை முகமாலை மற்றும் ஓமந்தையில் திறத்தல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக தமது நிலைப்பாட்டை புலிகளின் தலைமை இன்று நோர்வேத் தூதருக்குத் தெரியப்படுத்தும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

தமிழர் தாயகமெங்கும் படுகொலைகளும்

(08 ஆம் பக்கம் பார்க்க)

### அம்பாறையில் நேற்று ஹர்த்தால்!

பொத்துவிலில் முஸ்லிகள் 11 பேர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டமை மற்றும் முஸ்லிம்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 14 பேர் காயமடைந்தமை என்பவற்றைக் கண்டித்து நேற்று அம்பாறை மாவட்டத்தில் பூரண ஹர்த்தால்

(08 ஆம் பக்கம் பார்க்க)

### எழுதுமட்டுவாளில் மோதல்!

யாழ்ப்பாணம், செப். 22

எழுதுமட்டுவாள் பகுதியிலுள்ள படையினரின் முன்னரங்க நிலைகள் மீது நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகள் ஊடுருவித் தாக்குதல் நடத்தினர் எனவும், அந்தத் தாக்குதலை முறியடிக்கும் நோக்கில் தாமும் பதில் தாக்குதல் மேற்கொண்ட

(08 ஆம் பக்கம் பார்க்க)

### "லிபர்பூலிலிருந்து" இன்று பொருள் இறக்கும்பணி

யாழ்ப்பாணம்.செப்.22

குடாநாட்டுக்கான அத்தியாவசியப் பொருள்களுடன் வந்துள்ள "லிபர்பூல்" கப்பலில் இருந்து பொருள் இறக்கும் பணி இன்று பருத்தித்துறையில் ஆரம்பமாகவிருக்கின்றது.

திருகோணமலையிலிருந்து அரிசி, கோதுமை மா, சீனி, பால்மா ஆகிய பொருள்களை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட இக்கப்பல் நேற்றுக் காங்கேசன்துறையை வந்தடைந்தது.

இக்கப்பலில் இருந்து பொருள் இறக்கும் பணிகள் பருத்தித்துறை துறைமுகத்தில்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் தாயக நிலைவரத்தை இந்தியாவுக்கு எடுத்துவிளக்குவது எமது தார்மீகக் கடமை

### அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு



சிங்கப்பூர், செப்.22

தமிழர் தாயகத்தின் நிலைமைகளை இந்திய அரசுக்கு எடுத்துரைக்க வேண்டியது எமது தார்மீகக் கடமை என்றே நினைக்கிறோம்.

சிங்கப்பூரில் வெளியாகும் 'தமிழ் முரசு' பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

அந்தச் செவ்வியில் அவர் தெரிவித்துள்ள சில விடயங்கள் வருமாறு:-

எங்களைப் பொறுத்த வரையில் இந்திய அரசுக்கு இங்குள்ள நிலைமைகளை எடுத்துரைப்பதென்பது எமது தார்மீகக் கடமையென்றே நினைக்கின்றோம்.

அயல் நாடென்ற வகையிலும் பெருமள

(08ஆம் பக்கம் பார்க்க)

## விளானில் பற்றைக்காட்டிலிருந்து சூட்டுக்காயத்துடன் 3 சடலங்கள் மீட்பு

யாழ்ப்பாணம்.செப்.22

இளவாலைப் பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட விளான் பகுதியில் பற்றைக்காட்டுக்குள் இருந்து மூன்று பேரின் சடலங்கள் சூட்டுக்காயங்களுடன் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

இளவாலையைச் சேர்ந்த பேரம்பலம் நவக்குமார் (வயது - 27), செல்லத்துரை காத்தீஸ்வரன் அல்லது சதீஸ்வரன் (வயது - 36), ஐயாத்தம்பி குமாரகுலசிங்கம் (வயது - 47) ஆகியோரின் சடலங்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமாலை சம்பவ இடத்துக்குச் சென்ற மல்லாகம் நீதிவான் திருமதி.ச.இளங்கோவன் விசாரணைகளை நடத்தினார்.

நேற்றுக்காலை சந்தைக்குப் புறப்பட்ட இவர்கள் வீடு திரும்பாததை அடுத்து அவர்களைத் தேடிச்சென்ற உறவினர்கள், சடலங்களைப் பற்றைக்குள் கண்டனர் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சடலங்களை பிரேத பரிசோதனைக்காக தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு அனுப்புமாறு நீதிவான் பொலீஸாருக்கு உத்தரவிட்டார். (1)

## இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகருடன் தமிழ்க் கூட்டமைப்பினர் ஒருமணிநேரம் பேச்சு

கொழும்பு, செப்.22

புதுடில்லியில் தங்கியுள்ள இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுப் பிற்பகல் இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணனைச் சந்தித்து சுமார் ஒரு மணிநேரம் பேச்சு நடத்தினர்.

இலங்கையில் நடைபெற்றுவரும் வன்செயல்கள் குறித்தும், இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்றுவரும் மோதல்களினால் பாதிக்கப்பட்டு, மக்கள் இடம்பெயர்ந்து அவலப்படுவது பற்றியும் கூட்டமைப்பு எம்.பிக்கள் குழு நாராயணனுக்கு விளக்கமளித்தது.

அத்துடன், இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண இந்தியா உதவ வேண்டும் எனவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்ட ஏனைய விவரங்கள் முழுமையாக வெளியிடப்படவில்லை.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 வீதியின் அவசியத்தை விளக்கி யாழ்.ஆயர், ஜனாதிபதிக்கு கடிதம்

யாழ்ப்பாணம்.செப்.22

ஏ-9 வீதியை விரைந்து திறந்து பொதுமக்களின் பாவனைக்கு அனுமதிக்க பாதுகாப்பு அமைச்சுக்கு அதிகாரம் வழங்குங்கள்.

இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார் யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை.

ஏ-9 வீதியை விரைந்து திறக்க வேண்டியதன் அவசியத்தை விளக்கி, யாழ்.ஆயர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் :-

2002 ஆம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் யாழ்.குடாநாட்டையும் பெருநிலப்பரப்பையும் இணைக்கும் ஏ-9 பாதை திறந்து வைக்கப்பட்டது. (08 ஆம் பக்கம் பார்க்க)

## ஒருமாத காலத்தினுள் வந்துசேர்ந்த பொருள்கள் மூன்று வாரங்களுக்கு மட்டுமே போதுமானவை

### உணவு நிலையை விளக்கி யாழ்.அரச அதிபர் அறிக்கை

யாழ்ப்பாணம்.செப்.22

குடாநாட்டில் கடந்த மாதம் 11 ஆம் திகதிக்குப்பின் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைக்குப் பின்னர் மூன்று கப்பல்கள் மூலம் எடுத்துவரப்பட்ட அத்தியாவசியப் பொருள்கள் மூன்று வாரங்களுக்கே போதுமானவை என்று யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் இருந்து இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தின் உணவுப்பொருள் கையிருப்புத் தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

[illegible] ஆயிரத்து 624 மெற்றிக்தொன், மேர்க்ஸ் ஹின்ட் கப்பல் மூலம் 900 மெற்றிக்தொன், லிபர் பூல் கப்பல் மூலம் ஆயிரத்து 875 மெற்றிக்தொன் உணவுப்பொருள்களுமாக மொத்தம் 6ஆயிரத்து 399 மெற்றிக்தொன் அரிசி, சீனி, கோதுமைமா, பால்மா என்பன வந்துள்ளது.

இந்த உணவுப்பொருள்கள் (08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

### இடம்பெயர்ந்த மற்றும் தொழில் இழந்தவர்களுக்கு

# 2ஆம் கட்டத்தில் வழங்கப்பட்ட பொருள்களின் அளவைக் கழித்தே மூன்றாம் கட்ட நிவாரணம்

யாழ்ப்பாணம்.செப்.22

குடாநாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான மூன்றாம் கட்ட நிவாரணத்தின்போது, இரண்டாம் கட்டத்தில் வழங்கப்பட்ட பொருள்களின் அளவைக்கழித்தே வழங்கப்படும்.

அசாதாரண சூழ்நிலை காரணமாக 11.08.2006க்குப் பின்னர் இடம்பெயர்ந்துள்ளவர்கள், அதற்கு முன்னர் இடம்பெயர்ந்தவர்கள், மீனவர்கள், தொழில் இழந்தவர்கள் ஆகியோருக்கு இந்த வகையில் நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

மேற்குறிப்பிட்டவர்களுக்கு ஏற்கனவே இரண்டாம் கட்ட நிவாரண விநியோகத்தின் போது வழங்கப்பட்ட அரிசி, சீனி, பருப்பு ஆகியவற்றின் அளவுகள் கழிக்கப்பட்டே மூன்றாம் கட்ட நிவாரணம் வழங்கப்படும் என்றும்-

அடுத்தமாதம் நிவாரணப்பொருள்கள் முழுமையான அளவில் வழங்கப்படும் என்றும் - அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

மூன்றாம் கட்ட நிவாரண விநியோகத்தின் போது அரிசி, கோதுமை மா, சீனி, ஆகியவை வழங்கப்படும். பருப்பு வழங்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தவகையில் - இடம்பெயர்ந்தவர்கள், மீனவர்கள், தொழில் இழந்தவர்களுக்கு மூன்றாம் கட்ட நிவாரண விநியோகத்தின் போது வழங்கப்படவுள்ள பொருள்கள் மற்றும் அவற்றின் நிறைபற்றிய விவரம் வருமாறு.

ஒரு அங்கத்தவர் கொண்ட குடும்பத்துக்கு 2 கிலோ 575 கிராம் அரிசி, 2கிலோ கோதுமை மா, 500 கிராம் சீனியும் -

இரண்டு அங்கத்தவர் கொண்ட குடும்பத்துக்கு 6 கிலோ 100 கிராம் அரிசி, 4கிலோ 300 கிராம் கோதுமை மா, 700 கிராம் சீனியும் -

மூன்று அங்கத்தவர் கொண்ட குடும்பத்துக்கு 9கிலோ 175 கிராம் அரிசி, 5கிலோ 400 கிராம் மா, ஒரு கிலோ சீனியும் -

நான்கு அங்கத்தவர் கொண்ட, குடும்பத்துக்கு 11கிலோ 25 கிராம் அரிசி, 6கிலோ 400 கிராம் கோதுமைமா, ஒரு கிலோ 250 கிராம் சீனியும் -

ஐந்துக்கும் அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட, குடும்பம் ஒன்றுக்கு 13கிலோ 200 கிராம் அரிசி, 8கிலோ 400 கிராம் கோதுமைமா, இரண்டு கிலோ சீனியும் - வழங்கப்படும்.

அதேசமயம் -

பணத்துக்கு பொருள் பெறுபவர்களுக்கு மூன்றாம் கட்ட உணவுப்பொருள் விநியோகத்தின்போது முழுமையான அளவில் பொருள்கள் வழங்கப்படும். இவ்வாறு வழங்கப்படவுள்ள உணவுப்பொருள் பற்றிய விவரம் குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை அடிப்படையில் வருமாறு:-

ஒரு அங்கத்தவர் கொண்ட, குடும்பத்துக்கு 4கிலோ அரிசி, 2கிலோ கோதுமை மா, ஒரு கிலோ சீனி, ஒருகிலோ பருப்பும் -

இரண்டு அங்கத்தவர் கொண்ட, குடும்பத்துக்கு 8கிலோ அரிசி, 4கிலோ கோதுமைமா, ஒரு கிலோ 500 கிராம் சீனி, ஒரு கிலோ பருப்பும் -

மூன்று அங்கத்தவர் கொண்ட, குடும்பத்துக்கு 12கிலோ அரிசி, 6 கிலோ கோதுமைமா, 2கிலோ சீனி , ஒருகிலோ பருப்பும் -

நான்கு அங்கத்தவர் கொண்ட, குடும்பத்துக்கு 16கிலோ அரிசி, 8 கிலோ கோதுமைமா, 2கிலோ 500கிராம் சீனி , ஒருகிலோ பருப்பும் -

ஐந்துக்கும் அதற்கு மேற்பட்ட அங்கத்தவரைக் கொண்ட, குடும்பத்துக்கு 20கிலோ அரிசி, 10கிலோ கோதுமைமா, 3கிலோ சீனி, ஒருகிலோ பருப்பும் - வழங்கப்படவிருக்கின்றது. (1)

## அதிரடிப்படை இன்ஸ்பெக்டர் இடமாற்றம் செய்யப்பட்டார்

கொழும்பு, செப். 22

பொத்துவில், சாஸ்திரிவெளி பகுதி அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பிரதம இன்ஸ்பெக்டர் குணரட்ண பொலிஸ் தலைமையகத்திற்கு இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார். நேற்று முதல் இந்த இடமாற்றம் நடைமுறைக்கு வந்துள்ளது.

பொத்துவில் சாஸ்திரிவெளியில் முஸ்லிம்கள் கொல்லப்பட்ட தையடுத்து அதிரடிப்படை அதிகாரியை இடமாற்றம் செய்யும்படி அப்பகுதி மக்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களை நடத்தி வந்தனர். கொல்லப்பட்ட முஸ்லிம்களுக்கு நஷ்ட ஈடு வழங்கச் சென்ற போக்குவரத்து அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி தலைமையிலான குழுவினரிடமும் அப்பகுதி மக்கள் இவ்வேண்டுகோளை வற்புறுத்தி முன்வைத்தனர். இவ்வதிகாரியை இடமாற்றம் செய்யாவிட்டால் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தொடர் போராட்டங்களை நடத்தப் போகிறார்கள் எனவும் அவர்கள் அறிவித்திருந்தனர்.

இதேவேளை, கடந்த 18ஆம் திகதி முதல் ஸ்தம்பித்துப் போயிருந்த பொத்து வில் நகரம் நேற்று வழமைக்குத் திரும்பியது. மூடப்பட்டிருந்த கடைகள் அனைத்தும் நேற்று திறக்கப்பட்டிருந்தன. போக்குவரத்துச் சேவைகளும் நடைபெற்றன. (உ)

# பொத்துவில் சம்பவம் குறித்து மனித உரிமைக்குழு விசாரணை!

## விசேட அதிகாரிகள் அங்கு விரைவு

கொழும்பு, செப். 22

பொத்துவில், இரத்தல்குளம் பகுதியில் இடம்பெற்ற முஸ்லிம்களின் கொலை குறித்து இலங்கை மனித உரிமை ஆணைக்குழு விசேட விசாரணைகளை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கொலைகள் குறித்தான தகவல்களைத் திரட்டுவதற்காக மனித உரிமை ஆணைக்குழுவின் அம்பாறை மற்றும் கல்முனை அலுவலகங்களின் அதிகாரிகள் பொத்துவிலுக்குச் சென்றிருக்கின்றனர் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மேலதிக செயலாளர் நிமால் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தின்போது பிரதேச பாதுகாப்புத் தரப்பினர் நடந்து கொண்ட விதம் மற்றும் மக்கள் செயற்பட்ட விதம் என்பன பற்றி விசாரணைகள் நடத்தப்படவுள்ளன எனவும், விசேட விசாரணை அறிக்கையொன்றைப் பெற்று மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (க)

## சகல வீதிகளூடாகவும் தொடர்ந்தும் மட்டுப்படுத்திய பஸ்சேவை என அறிவிப்பு

யாழ்ப்பாணம்.செப்.22

குடாநாட்டின் சகல வீதிகளிலும் இன்று முதல் மட்டுப்படுத்தப்பட்ட பஸ்சேவை இடம்பெறும் என்று போக்குவரத்துச்சபை அதிகாரி ஒருவர் நேற்றிரவு தெரிவித்தார்.

போக்குவரத்துச் சபையின் பஸ்சேவைகள் டீசல் இல்லாத காரணத்தால் நேற்று முற்றாக ஸ்தம்பித்திருந்தன.

நேற்று 3ஆயிரம் லீற்றர் டீசல் வழங்கப்பட்டுள்ளது என்றும்-

இந்த டீசலைப் பயன்படுத்தி இன்றுமுதல் மட்டுப்படுத்தப்பட்ட பஸ்சேவையை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

ஒவ்வொரு பாதையிலும் ஓரிருசேவை என்ற அடிப்படையில் 15 சேவைகளை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் - தெரிவிக்கப்பட்டது. (1)

## அரச உத்தியோகத்தர்கள் இன்று கப்பல் பயணத்துக்கு பதிய ஏற்பாடு

யாழ்ப்பாணம்.செப்.22

யாழ்.மாவட்டத்திலிருந்து கப்பல் மூலம் வெளியிடங்களுக்குப் பயணம் செய்யவுள்ள அரச உத்தியோகத்தர்களை இன்று வெள்ளிக்கிழமை யாழ்.சிவில் அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ளுமாறு யாழ்.சிவில் நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர்.

நாளை சனிக்கிழமை மாணவர்களும், கல்விப் புலமைப் பரிசில் பெற்று வெளிநாடு செல்லவுள்ள மாணவர்களும் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - வெளிநாட்டுக்கடவுச்சீட்டு வைத்திருப்போருக்கான பதிவுகள் நேற்று இடம்பெற்றன என்று சிவில் அலுவலகத்தினர் தெரிவித்தனர். பயண அனுமதி பற்றிய விவரங்கள் பின்னர் அறியத் தரப்படும். என்றும் தெரிவிக்கப்பட்டது. (203)

# வைத்தியர்கள் எவரும் விலகிச்செல்லவில்லை

### யாழ்.வைத்தியசாலைப்பணிப்பாளர் கூறுகிறார்

நல்லூர்.செப்.22

யாழ்.போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியர்கள் எவரும் தமது பணியில் இருந்து விலகிச்செல்லவில்லை என்று யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியக்கலாநிதி அ.எ. ஞானஜோதி தெரிவித்துள்ளார்.

போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியர்களில் சிலர் கொழும்புக்கு வெளியேறிவிட்டனர் என்று வெளிவரும் தகவல்கள் குறித்து கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக வைத்தியசாலைப் பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது :-

எமது வைத்தியர்கள் எவரும் பணியிலிருந்து விலகிவிடவில்லை. பரீட்சை மற்றும் அத்தியாவசியக் கடமைகளை மேற்கொள்வதற்காக அவர்கள் கொழும்பு சென்றுள்ளனர். தமது வேலைகளை அவர்கள் பூர்த்தி செய்த பின்னர் கடமைக்குத் திரும்புவார்கள்.

யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்களில் சிலர் வெளியேறிவிட்டனர் என்று கூறப்படுவது வெறும் வதந்தி. இந்தச் செய்தியில் உண்மையில்லை.

இங்கு நடைபெறும் அத்தியாவசிய சத்திர சிகிச்சைகள் தொடர்ந்தும் நடைபெற்றுவருகின்றன. எனினும் முன்னர் போல் முழுமையான அளவில் அவசர சிகிச்சைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகின்றோம் - என்றார். (1-111-203)

## இணை வெளிவிவகார அமைச்சர் அகமது

இந்தியாவில் தங்கியுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை புதுடில்லியில் இந்திய வெளிவிவகார இணை அமைச்சர் அகமதுவை சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

நேற்றைய உதயனில் இது தொடர்பாக வெளியான செய்தியில் அகமது இந்திய வெளிவிவகார இணைச்செயலாளர் என்பது பிழையாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதனைத் திருத்தி வாசிக்கவும்.

தவறுக்கு வருந்துகிறோம். (ஆ-ர்)

## வெளிமாவட்ட மாணவருக்கு இலவசமாக உணவுப்பொருள்

### பெற்றுக்கொள்ளுமாறு மாணவர் ஒன்றியம் அழைப்பு

எமது பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வெளிமாவட்ட மாணவர்களுக்கு உணவு மற்றும் வேறுசில அடிப்படைப் பொருள்கள் தற்போது இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது - என்றும் இதுவரை இந்த உதவிப்பொருள்களைப் பெற்றுக்கொள்ளாத மாணவர்கள் தமது பீட மாணவர் ஒன்றியத்தினருடன் தொடர்புகொண்டு அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. மேற்படி உணவுப் பொருள்கள் துணைவேந்தரின் முயற்சியின் பேரில், அரச அதிபரின் சிபார்சுடன் வழங்கப்படுவதாகவும்- ஒன்றியம் அறிவித்துள்ளது. (ப-203)

## பருகொலைகள்

### சங்கானையில்...

யாழ்ப்பாணம்.செப்.22

சங்கானைப் பகுதியில் நேற்றுக்காலை 8.45 மணியளவில் இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட சூட்டுச்சம்பவத்தின் போது தபால் ஊழியர் ஒருவர் அந்த இடத்திலேயே பலியானார்.

மாவிட்டபுரம் கொல்லங்கலட்டியைச் சொந்த இடமாகவும் தொல்புரம் மேற்கு சுழிபுரத்தில் வசித்து வந்தவருமான இரண்டு பிள்ளைகளின் தந்தையாரான நடராசா தவராசா (வயது - 39) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

தெல்லிப்பழை தபால் நிலையத்தில் பணிபுரியும் இவர் பணிக்கு சென்று கொண்டிருந்த சமயமே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் எனவும் -

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மல்லாகம் நீதிவான் சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டார். (68-190-15-78-203)

### வல்வெட்டித்துறையில்...

வடமராட்சி வல்வெட்டித்துறை வேம்படியில் நேற்றுக்காலை 7.30 மணியளவில் இனந்தெரியாதவர்களால் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கதிர்காமலிங்கம் அமிர்தலிங்கம் (வயது 50) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார். (15-78-173-190-203)

* * *

நேற்றுக்காலை வல்வெட்டித்துறையில்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனைக்கோட்டை வீதியோரங்கள் 12 மணியுடன் மீன்சந்தையாக மாற்றம்

நவாலி.செப்.22

ஆனைக்கோட்டை சந்தியிலுள்ள வீதியோரங்கள் நண்பகல் 12 மணிக்குப்பின்னர் மீன்சந்தையாக மாறி விடுகின்றன.

இங்குள்ள மீனவர்கள் காலை 7 மணிக்கு கடலுக்குச் சென்று பகல் 11 மணிக்கு திரும்ப வேண்டுமென்ற உத்தரவுக்கமைய 11 மணிக்குப் பின் தாம் கொண்டு வரும் மீன்களை இவ்விடத்தில் வைத்து விற்பனை செய்கின்றனர்.

கடந்த வாரம் இவ்விடத்தில் சென்று கொண்டிருந்த லாண்ட் மாஸ்ரரொன்று கனரக வாகனமொன்றுடன் மோதியதில் லாண்ட் மாஸ்ரர் பலத்த சேதத்துக்குள்ளானதுடன் சாரதியும் பலத்த காயங்களுடன் யாழ்.அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (100)

## பங்கீட்டுப் பொருள்களுக்காக முண்டியடிக்கத் தேவையில்லை

### கூட்டுறவு வட்டாரங்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.செப்.22

பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்படும் பொருள்களை மக்கள் முண்டியடித்துக்கொண்டு பெறவேண்டிய அவசியம் இல்லை என்று கூட்டுறவுச்சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது சகல இடங்களிலும் பங்கீட்டு அடிப்படையில் மண்ணெண்ணெய் உட்பட ஏனைய பொருள்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

இவற்றைப் பெறுவதற்கு மக்கள் ஒரேயடியாக முண்டியடித்துக் கொண்டு நிற்பதால் வீண் சனநெருக்கடியும், பணியாளர்களுக்குப் பணிச்சுமையும் ஏற்படுகின்றன.

பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்படும் பொருள்கள் [illegible] கும்.

எனவே, மக்கள் முண்டியடிக்காது பொருள்களைப் பெறச்சென்றால் சனநெருக்கடி குறைவடைவதுடன் பணிச்சுமையும் வீண் அலைச்சலும் குறைவடையுமென்று கூட்டுறவு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

அத்துடன் அண்மையில் சங்கங்களில் இருந்த கையிருப்பு மூலமே மக்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் 2லீற்றர் வீதம் மண் எண்ணெய் விநியோகிக்கப்பட்டு வந்தது.

இதில் குறிப்பிட்ட சில மக்கள் 2 லீற்றர் வீதமும் சிலர் ஒரு லீற்றர் விதமும் மண்எண்ணெய் பெற்றுள்ளனர். கையிருப்பு முடிவடைந்தமையால் ஏனையோருக்கு மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை.

இந்நிலையில் சங்கங்களுக்கு மீண்டும் [illegible] வரும்போது ஒருலீற்றர் [illegible]பெற்றுக்கொண்டவர்களுக்கு மேலும்

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# கருத்துச் சுதந்திரத்துக்கு சாவு மணி

சர்வதேச சமாதான தினம் நேற்று உலகம் முழுவதும் அனுஷ்டிக்கப்பட்டது. சமாதானம் குறித்தும், அமைதி பற்றியும், சௌஜன்ய வாழ்க்கை சம்பந்தமாகவும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் உலகத் தலைவர்கள் முழக்கமிடுவதையும் கேட்க முடிந்தது.

நியாயமான உரிமைகள் மற்றும் சுதந்திரத்துடன் கூடிய - அடக்கு முறையற்ற - நீதியான - கௌரவமான - வாழ்க்கை முறையை, பாகுபாடின்றி அனைவருக்கும் சமமாக வழங்குகின்ற - உறுதிப்படுத்துகின்ற - ஒரு சமுதாயத்திலேயே உண்மையான சமாதானமும், மாசற்ற அமைதியும் நிலைக்க முடியும்; நீடிக்க முடியும்.

மக்களை மாக்களாக்கி, அவர்களை அடக்கி, ஒடுக்கி, அச்சுறுத்தி, இறுக்கமான சட்ட விதிகளினால் கட்டி வைத்துக் கொண்டு அமைதியைப் பேணுகிறோம் என்று மார்தட்டுவதில் அர்த்தமில்லை.

அடிப்படைச் சுதந்திரங்களும், உரிமைகளும் ஒவ்வொரு சாதாரண பிரஜைக்கும் உறுதிப்படுத்தப்பட்ட சமுதாயத்தில்தான் உண்மையான சமாதானம் பிறக்க முடியும். அமைதிப் பிரவாகம் ஊற்றெடுக்க முடியும்.

மனித உரிமைகளும், அடிப்படைச் சுதந்திரங்களும் பேணப்படாத நாட்டின் ஆட்சி, அமைதியின்பாற்பட்டதல்ல.

ஆகவே, இன்று உலகெங்கும் பேசப்படும் 'சமாதானம்' என்ற விடயப் பொருள் ஒரு சமூகத்தில் நிலைநிறுத்தப்பட வேண்டுமானால், மனித உரிமைகளும், அடிப்படைச் சுதந்திரங்களும் அங்கு உறுதிப்படுத்தப்படுவது அவசியமாகின்றது; கட்டாயமாகின்றது.

அடிப்படை உரிமைகள், சுதந்திரங்கள், சிவில் - அரசியல் உரிமைகள் என்று பலவாறாக விமர்சிக்கப்படும் அம்சங்களுள் முதன்மையானது கருத்து வெளியிடும் சுதந்திரமாகும்.

நமது நாட்டிலும் அரசமைப்பு ஊடாகக் கருத்து வெளியிடும் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டாலும் அது ஏடுகளில் பொறிக்கப்பட்ட ஒன்றாகி விட்டதே தவிர, நடைமுறையில் இல்லை என்றாகிவிட்டது.

'ஒவ்வொருவரும் தமக்குரிய நம்பிக்கை குறித்தும், அரசியல் கோட்பாடு குறித்தும் கருத்து வெளியிடும் சுதந்திரம் உள்ளவர்கள்' - என்ற அர்த்தத்தில் இலங்கைத் தீவின் அரசமைப்பில் கருத்து வெளியிடும் சுதந்திரம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால், இவ்வாறு கருத்து வெளியிடும் சுதந்திரத்தின் அடிப்படைத் தளங்களாக அமைகின்ற ஊடகங்களோ தாம் கொண்ட நிலைப்பாட்டை சுதந்திரமாக - சுயாதீனமாக - அச்சமின்றி - வெளிப்படுத்த முடியாத ஓர் அச்சுறுத்தல் சூழ்நிலை இலங்கைத் தீவில் உருவாக்கப்பட்டிருக்கின்றது.

அடக்குமுறைக்கு எதிராகப் போராடும் தமிழ் ஊடகவியலாளர்கள், தமிழ் ஊடகங்கள் ஆகிய தரப்புகள் மீது விடுக்கப்பட்ட இந்த அச்சுறுத்தல், இப்போது ஊடகத்துறையில் இருக்கின்ற தமிழர் என்ற இலக்கு நோக்கித் திரும்பியிருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. இனவாதத்தின் உச்சக் கட்டம் இது.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரபலம் பெற்ற ஊடகம் ஒன்றை - நீண்ட காலம் இத்துறையில் தனது தனி முத்திரையைப் பதித்து வரும் ஓர் ஊடக அமைப்பை - செம்மையாக நிர்வகித்து, இலங்கைத் தீவில் பிரபலமும், முன்னிலையும் வகிக்கத்தக்கதாக அதனை வழிநடத்தி வருகின்றவர் ஒரு தமிழர் என்பதால், அந்தத் தனி ஒரு மனிதரைப் பெரும்பான்மை இன மக்கள் மத்தியில் பயங்கரவாதியாகச் சித்திரிப்பதன் மூலம் அந்த ஊடகத்திற்கு அச்சுறுத்தல் விடுத்து, கருத்து வெளியிடுவதற்கான அதன் சுதந்திரத்தை அடக்கி, அதனை ஒடுக்க முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

இப்போது நாட்டில் யுத்தப் பதற்றம் ஏற்பட்டிருக்கின்ற நிலைமை. தமது உரிமைகளுக்காக ஆயுதம் ஏந்திப் போராடும் விடுதலைப் புலிகளுக்கும், அவர்களுக்கு ஆதரவான தமிழர்களுக்கும் எதிராகத் தென்னிலங்கைப் பெரும்பான்மைச் சிங்களவர்கள் மத்தியில் காழ்ப்புணர்ச்சியும், விரோதமும், குரோதமும், பகையுறவும், சீற்றமும், எரிச்சலும் உச்சம் பெற்றிருக்கும் சமயம் இது.

இந்நிலையில், தென்னிலங்கையில் மூன்று மொழிகளிலும் இலத்திரனியல் ஊடகங்களை நடத்தி வரும் ஓர் நிர்வாகியின் முகத் தோற்றப் படத்தைப் புலியின் முகமாகச் சித்திரித்து தென்னிலங்கை முழுவதும் வர்ணத்தில் பெரிய 'போஸ்டர்' அடித்து ஒட்டுவதும், பொது இடங்களில் உள்ள அந்த ஊடக நிறுவனத்தின் பெரிய, பெரிய விளம்பரப் பலகைகளை இரவோடு இரவாக நாசம[illegible]பதும் அரங்கேறுகின்றன. இவை கருத்துச் சுதந்திரத்துக்கு எதிராக விடுக்கப்படும் பெரும் சவால் நடவடிக்கைகளின்றி வேறில்லை.

பேரினவாதத்தை - மேலாண்மைப் போக்கை - கையிலெடுத்திருக்கும் தென்னிலங்கைச் சக்திகளே, கருத்து வெளியிடும் சுதந்திரமும் பேரினவாதத்துக்கு மட்டுமே உரியது என்ற அடக்கு முறை நிலைப்பாட்டைக் கைக்கொண்டு, அதன் வழியில் இத்தகைய குரோத நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றன.

பிரபல இலத்திரனியல் ஊடகங்களின் அதிபரை புலியாகச் சித்திரிப்பதன் மூலம் இச்சக்திகள் தென்னிலங்கைக்கு எடுத்துக் கூற முனையும் - பரப்ப எத்தனிக்கும் - கருத்துத்தான் என்ன?

இது புலி ஊடகம். புலிக்குரிய படிப்பினையை - பாடத்தை - இந்த ஊடகத்துக்கும் அதைச் சார்ந்தோருக்கும் போதியுங்கள் என்று தென்னிலங்கைப் பெரும்பான்மை மக்களைக் குரோதத்துடன் தூண்டி விடும் சதி, நாச வேலைத் திட்டம்தானே இது?

அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட தமிழர்களுக்காகக் குரல் எழுப்பிவரும் ஊடகங்கள் மீது நேரடியாகத் தாக்குதல் நடத்தி, ஊடகவியலாளர்களையும், ஊடகப் பணியாளர்களையும் கொன்று, விநியோகத்தைத் தடுத்து, ஊடகத்துறையினருக்கான பாதுகாப்பை விலக்கி, அச்சுறுத்தி, தமிழ்த் தேசியத்துக்காகக் குரல் எழுப்பும் ஊடகத்துறையின் குரல்வளையை நசித்து, நாட்டாண்மை பண்ணிய சக்திகள், இப்போது நாட்டின் தேசிய ரீதியில் செயற்படும் ஊடகங்கள் மீதும் நேரடியாகக் கைவைக்கத் தயாராகி விட்டன என்பதற்குக் கட்டியம் கூறும் நிகழ்வாகவே இப்போதைய - இந்த - போக்கைப் பார்க்க வேண்டும்.

மேற்படி ஊடக அதிபரைப் படுகொலை செய்வதற்கான சதித் திட்டம் தீட்டப்பட்டமை பற்றிய தகவல் சில காலத்துக்கு முன்னர் அம்பலமான பின்னணியில் அவரைப் 'புலிப் பயங்கரவாதியாக' சித்திரிக்கும் பிரசாரத் திட்டம் இப்போது பெரும் எடுப்பில் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது.

ஊடகச் சுதந்திரம், கருத்து வெளியிடும் உரிமை ஆகியன பற்றி அதிகம் பேசும் தரப்புகள் கூட இந்த விடயத்தில் மௌனம் சாதிப்பது ஏனோ?

கருத்துக் கூறும் சுதந்திரத்துக்காகக் குரல் எழுப்பும் அனைவரும் ஒன்றுபட்டு அந்த உரிமைக்காகப் போராடும் அவசர - அவசிய - சூழ்நிலை உருவாகி விட்டது. இனிமேலும், பொறுத்திருப்பது - தாமதிப்பது - அடக்குமுறைக்கு அடங்கிப் போவததாக அமைந்து விடும்.

# அப்பாவி மாணவரும் பொதுமக்களும் வன்முறைக்குள்ளாவதை நிறுத்துங்கள்

## தமிழ் மாணவர் ஒன்றியம் ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம்,செப்.22

உங்கள் சொற்களில் உண்மை இருக்குமானால், இலங்கையின் சகல இன மக்களுக்கும் நீங்கள் ஜனாதிபதியாக இருப்பீர்களானால், அமைதியைத் தோற்றுவிப்பதில் நேர்மையுடையவரானால், பாதுகாப்புப் படையினர் மத்தியில் ஒழுக்கத்தை ஏற்படுத்தி, அப்பாவி மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் எதிராக அவர்கள் புரியும் வன்முறைகளைத் தடுத்து நிறுத்துங்கள்.

இவ்வாறு கேட்டுக்கொள்ளும் மகஜர் ஒன்றை யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்துள்ளது. மகஜரின் பிரதிகள் ஐ.நா. செயலாளர் நாயகம் கொபி அனான், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் தலைவர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ஏ-9 பாதை எதிர்பாராத விதமாக மூடப்பட்டு இராணுவ நடவடிக்கைகள் தொடர்வதால் குடாநாட்டில் பெரும் துன்பங்களுக்கு வழிவகுத்துள்ளது. வயது, இனம், தொழில்பாகுபாடற்ற முறையில் அனைவரையும் பட்டினிக்குள் தள்ளியிருக்கிறது என்று மகஜரில் குறிப்பிட்டுள்ள அவர்கள் சில பின்வரும் எதிர் விளைவுகளையும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஊரடங்கு தொடர்வதால் மருத்துவ வசதிகள் தடைப்பட்டுள்ளன. போக்குவரத்து சீர்குலைந்து மருத்துவ பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பல மாணவர்களும் அரச ஊழியர்களும் தம் இடங்களுக்குத் திரும்ப முடியாமலிருக்கின்றனர். பாடசாலைகளுக்கு அருகில் புதிய மினி முகாம்கள் உருவாகியுள்ளன. பாடசாலைகளுக்கருகில் ஷெல் தாக்குதல்களும் பல்குழல் பீரங்கி தாக்குதல்களும் நடத்தப்படுவதால், பாடசாலை சிறுவர்கள் உளவியல் பாதிப்புறும் அச்ச பீதிக்கும் உள்ளாகிவருகின்றார்கள் - என்று அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# நாச்சிமார் கோயிலடியில் கடை உடைத்துத் திருட்டு

ஊரடங்கு அமுலில் இருந்தவேளை கே.கே.எஸ். வீதி நாச்சிமார் கோயிலடிக்குச் சமீபமாக உள்ள வீடியோக் கடை ஒன்றில் நேற்றுமுன்தினம் இரவு திருட்டு இடம்பெற்றுள்ளது.

கடையின் கூரையைப் பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள், அங்கிருந்து பெறுமதிமிக்க பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

சுமார் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான கணனி, டெக்குகள், டி.வி.டி. பிளேயர், புதிய வீடியோ கொப்பிகள் பதிவு செய்யப்பட்ட கசற்றுகள், போட்டோ கொப்பி இயந்திரம் ஆகியனவும் திருட்டுப்போன பொருள்களில் அடங்கும்.

இது தொடர்பாக யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளதாக அதன் உரிமையாளர் தெரிவித்துள்ளார். (1-203)

## வலி.தென்மேற்குப் பிரதேசத்தில்

# மின்சாரம் இன்மையால் டீசல் வழங்கமுடியாத நிலைமை

யாழ்ப்பாணம்,செப்.22

மானிப்பாய் ப.நோ.கூ.சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் போதுமான டீசல் இருந்தும் மின்சாரம் இன்மையால் டீசல் வழங்கமுடியாதுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இதனால், வலி. தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட உழவு இயந்திரங்கள், டீசல் வாகனங்கள் அடிக்கடி வந்து ஏமாற்றத்துடன் திரும்புவதைக் காண முடிகிறது.

இதேவேளை மேற்குறிப்பிட்ட ப.நோ.கூ. சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்குச் சொந்தமான மின் வழங்கும் மோட்டார் இயங்கு நிலையில் இருக்கின்றது.

எனவே, மின்வழங்கும் மோட்டார் ஊடாக டீசலை வழங்கி உதவுமாறு உழவு இயந்திர உரிமையாளர் கேட்டுள்ளனர்.

மேற்படி விடயத்தை வலி.தென்மேற்கு பிரதேச செயலாளரின் கவனத்திற்கு நவாலி, சங்குவேலி உழவு இயந்திர பாவனையாளர் கொண்டுவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-95)



ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷைச் சந்தித்து நெருக்கமாக அளவளாவுகிறார்.

# தீவனத் தட்டுப்பாட்டினால் மாடுவளர்ப்போர் பாதிப்பு

மாட்டுத்தீவனம் பற்றாக்குறையினால் பால்மாடுகள் வளர்ப்போர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கறவை மாடுகளை வளர்ப்போர் அதற்கான தவிடு, பிண்ணாக்கு என்பன பெறுவதில் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

பெரும் மாட்டுப்பட்டிகளை நடத்துவோர் தீவனத்தை கொழும்பில் இருந்து பெற்றுத்தரும்படி வலி.தென்தேற்கு பிரதேச செயலரிடம் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப-95)

# வண்ணை பெருமாள் ஆலயத்தின் பெருந்திருவிழா ஞாயிறு ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.22

வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய பெருந்திருவிழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது..

எதிர்வரும் 30ஆம் திகதி மாலை சப்பரத் திருவிழாவும் மறுநாள் தேர்த்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. காலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று 9.30 மணிக்கு தேர்த் திருவிழா இடம்பெறும்.

முற்பகல் 11.30 மணிக்கு சுவாமி தேரிலிருந்து அவரோகணிப்பார். 12 மணிக்கு மகா ஆசீர்வாதம் இடம்பெறும். பிற்பகல் 2 மணிக்கு நவராத்திரி திருவிழாவின் இறுதிநாளான விஜயதசமியன்று மானம்பூ திருவிழா இடம்பெறும்.

மூன்றாம் திகதி காலை 7 மணிக்கு சூர்ணோற்சவம் 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை என்பன இடம்பெற்று காலை 9 மணிக்கு சந்திர புஷ்கரணியில் தீர்த்தோற்சவம் இடம்பெறும். அத்துடன் திருவோணதீப பூசை மகாயாக கும்பாபிஷேகம் என்பனவும் இடம் பெறவுள்ளன.

காலைப் பூசைகள் காலை 9 மணிக்கும் மாலை பூசைகள் பிற்பகல் 3 மணிக்கும் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. (1-203)

## மத்தியஸ்தர்களுக்கு ஊக்குவிப்புப் படி

யாழ். மாவட்டத்தில் மத்தியஸ்த சபையூடாகக் கடமையாற்றும் மத்தியஸ்தர்களுக்கு ஊக்குவிப்புப் படி வழங்கப்படவுள்ளது. நீதியமைச்சின் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

பிரதேச ரீதியாக மத்தியஸ்த சபையின் கூட்டங்களுக்கும் சபை அமர்வு நடவடிக்கைகளில் ஈடுபடும் மத்தியஸ்தர்களுக்கு போக்குவரத்துப் படியும் ஊக்குவிப்புப் படியும் வழங்கப்படும்.

மாதக் கடைசியில் இதற்கான கொடுப்பனவுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை, மத்தியஸ்த சபைகளின் கடமைகளை நிறைவேற்ற [illegible] செயலரால் நியமிக்கப்பட்டுள்ளார். (ப-95)

# சமுர்த்தி வங்கிப் பெட்டகத்தை திருடர் உடைக்க எடுத்த முயற்சி தோல்வி

தென்மராட்சி,செப்.22

வரணி வலய சமுர்த்தி வங்கி இரும்புக்காப்புப் பெட்டகம் உடைக்க திருடர்கள் மேற்கொண்ட முயற்சி பயனளிக்காததால் சமுர்த்தி பயனாளிகளின் பணம் உட்பட ஆவணங்கள் காப்பாற்றப்பட்டன.

எறிகணைத் தாக்குதல்களால் மூடப்பட்ட வங்கியினைத் திறப்பதற்கு வங்கி உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் சென்றபோது தி[illegible]டுமுயற்சி இடம்பெற்றுள்ளதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

வங்கிக் கட்டடத்தின் பின் கதவினை உடைத்து உள் சென்ற திருடர்கள் வங்கி காப்புப் பெட்டகத்தைத் திறக்க முயன்று அப்பகுதி சேதமடைந்த நிலையில் கைவிட்டுச் சென்றதை அவதானித்தனர்.

இச் சம்பவம் தொடர்பாக வங்கி உத்தியோகத்தர்கள் கொடிகாமம் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். (ப-117)

# சமுர்த்தி முத்திரை கிடைக்காதவர்கள் பணிமனைகளுக்கு அலைச்சல்

யாழ்ப்பாணம், செப்.22

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் உள்ள 28 கிராம அலுவலர் பிரிவுகளிலும் சமுர்த்தி உணவு முத்திரை வழங்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி உணவு முத்திரைக்காக ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கே 3ஆம் கட்ட முத்திரை வழங்[illegible]ள்ளது.

இதேவே[illegible], வறுமையில் உள்ள (70 வீதமானவர்களுக்கு) ஏனைய சமுர்த்தி உணவு முத்திரை கிடைக்காதவர்களுக்கு விரைவில் கிடைக்க வழி செய்யப்படும் என பிரதேச செயலாளர்கள் உறுதியளித்தபோதும் இதுவரை வழங்கப்படவில்லையெனக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

சமுர்த்தி உணவு முத்திரைக்காகத் தெரிவுசெய்யப்படாத பயனாளிக[illegible] சமுர்த்தி அலுவலர் பணிமனைகளு[illegible]கு அடிக்கடி அலைந்து திரிவதாக சமுர்த்தி அபி விருத்தி அலுவலர் வட்டாரங்கள் தெரிவித்தன. (ப-95)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெலிந்த சரீரத்திற்கு வலிமையான வளர்ச்சி

APPETON
WEIGHT GAIN™
சக்திமிகு பால்மா பானம்

வளர்ந்தவர்க்கும் பிள்ளைகளுக்கும்




எல்லா சிறப்புச் சந்தைகளிலும் நாடெங்கும் மருந்தகங்களிலும் விற்பனையாகின்றது.

ஏக பிரதிநிதிகள்
Suri Trading Company (Pvt) Ltd
Hotline: 0114810 251



## பாக்யா இசைப் பயிலகம்

*மணியர்பதி வீதி, கொக்குவில் மேற்கு*

02.10.2006 திங்கட்கிழமை விஜயதசமியாகிய நன்நாளில் இசை, இசைவாத்திய வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

- மிருதங்கம்
- வயலின்
- ஓகன்
- புல்லாங்குழல்
- வாய்ப்பாட்டும், பண்ணிசையும்.

**இன்று முதல் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம்.**

தொடர்பு: பாக்யா காகிதாதிகள்
121, கே.கே. எஸ்.வீதி, கொக்குவில்.
(53751)


## நெஞ்சம் மறவாத நினைவுகளுடன் நான்காண்டு



**திருமதி நகுலேஸ்வரி குலசிங்கம் (லீலா)**

*திதி: அமாவாசை 22.09.2006*

பெற்று வளர்த்துப் பிரியமுடன்
அமுதூட்டிய தெய்வமே!
பேதலித்து வாழ்கின்றோம்
உன்னைப் பிரிந்ததனால்,
பற்றை விடுத்து பரலோகம்
புகுந்த தெய்வமே!
பரமனடியில் சேர்ந்து
வாழ வேண்டுகிறோம்.

*கல்வியங்காடு,*
*யாழ்ப்பாணம்.*
(53767)
*நான்காண்டு நினைவுகளுடன்*
**குடும்பத்தினர்.**

## ஏறாவூரில் நேற்றுமுன்தினம் துக்கம் அனுஷ்டிப்பு

ஏறாவூர், செப்.22

பொத்துவில் பிரதேசத்தில் பத்து முஸ்லிம்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்றுமுன்தினம் ஏறாவூரில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. ஏறாவூர் இஸ்லாமிய இளைஞர் ஒன்றியம் என்ற அமைப்பின் வேண்டுகோளுக்கு அமைவாக இந்தத் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

ஏறாவூர் பிரதேச வீதியில் நேற்றுமுன்தினம் வெள்ளைக்கொடிகள் தொங்கவிடப் பட்டிருந்தன. வர்த்தக நிலையங்களும் மூடப் பட்டிருந்தன. எனினும், பாடசாலைகள், அரச அலுவலகங்கள் என்பன திறக்கப்பட்டிருந்தன. உள்ளூர் மற்றும் தூர இடங்களுக்கான போக்குவரத்துச் சேவைகளும் வழமை போன்று இடம்பெற்றன. (ஐ)

## லயன்ஸ் கழக ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்

தென்மராட்சி,செப்.22

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இடைநிறுத்தப் பட்ட ஆங்கிலப் பயிற்சி வகுப்பினை மீண்டும் நடத்த சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொண்ட மாணவ, மாணவிகள் பயிற்சி ஆசிரியர் லயன் எம்.டி.சண்முகநாதனுடன்தொடர்பு கொண்டு வகுப்புகள் ஆரம்பிக்கும் திகதியினைப் பெற்றுக் கொள்ளுமாறு கழகத்தலைவர் லயன் வ.ஸ்ரீபிரகாஸ் தெரிவித்துள்ளார்.

(ப-117)

## யாழ்.மாவட்ட தபால் அத்தியட்சகர்

நல்லூர்,செப்.22


யாழ்ப்பாணம் மாவட்டத்தின் தபால் அத்தியட்சகராக அ. ஜெபரட்ணம் தபால் திணைக்களத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்னர் முல்லைத்தீவு தபால் அத்தியட்சகராகப் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ப-111)

## முன்பள்ளி நிகழ்வு

மானிப்பாய் மேற்கு திருவள்ளுவர் சன சமூக நிலையத்தின் முன்பள்ளி விளையாட்டு விழா அண்மையில் தொழில் அதிபர் பூஜயாத் துரைதலைமையில் மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழக அனுசரணையுடன் நடைபெற்றது.(ப-90)



### யாழ்ப்பாணம் - வண்ணை
### ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

## மகோற்சவ விஞ்ஞாபனம் - 2006

### உற்சவ விபரங்கள்

| | |
|---|---|
| புரட்டாதி 07ஆம் நாள் (23.9.2006) சனிவாரம் | (முதலாம் சனிவார உற்சவம்) காலை கருடச் சேவை, மாலை கருடச்சேவை நவராத்திரி விரதாரம்பம் மாலை 5.00 மணி கர்மாரம்பம், அனுக்ஞை, சாந்தி வழிபாடு. |
| புரட்டாதி 08ஆம் நாள் (24.9.2006) ஆதிவாரம் | முற்பகல் 10.15 மணி **கொடியேற்றம்** (துவஜாரோகணம்) சூரிய பிரபைச் சேவை மாலை மஹாயாகாரம்பம் அன்னச்சேவை. |
| புரட்டாதி 09ஆம் நாள் (25.9.2006) சோமவாரம் | காலை: கேடகம் மாலை: சேஷ சயனச் சேவை |
| புரட்டாதி 10ஆம் நாள் (26.9.2006) மங்கலவாரம் | காலை: கேடகம் மாலை: கருடச் சேவை |
| புரட்டாதி 11ஆம் நாள் (27.9.2006) புதவாரம் | காலை: கேடகம் மாலை: அனுமச் சேவை |
| புரட்டாதி 12ஆம் நாள் (28.9.2006) குருவாரம் | காலை: கேடகம் மாலை: பூந்தண்டிகைச்சேவை |
| புரட்டாதி 13ஆம் நாள் (29.9.2006) சுக்கிரவாரம் | காலை: கேடகம் மாலை: கஜேந்திர சேவை |
| புரட்டாதி 14ஆம் நாள் (30.9.2006) சனிவாரம் | (இரண்டாம் சனி வாரம்) காலை: கருடச்சேவை மாலை: சப்பரம் (வெண்ணைத் தாளிச் சேவை) |
| புரட்டாதி 15ஆம் நாள் (1.10.2006) ஆதிவாரம் | காலை: கருடச்சேவை மாலை: அஸ்வாருடச்சேவை |
| புரட்டாதி 16ஆம் நாள் (2.10.2006) சோமவாரம் | காலை 7.30 மணி வசந்தமண்டப பூஜை, காலை 9.30 மணி **இரதோற்சவம்** முற்பகல் 11.30 மணி இரத அவரோஹணம் 12.00 மணி மஹா ஆசீர்வாதம் பிற்பகல் 2.00 மணி விஜயதசமி மானம்பூ உற்ஸவம் மாலை: கருடச்சேவை. |
| புரட்டாதி 17ஆம் நாள் (3.10.2006) மங்கலவாரம் | (ஏகாதசி) காலை 7.00 மணி சூர்ணோற்ஸவம் காலை 7.30 மணி வசந்த மண்டப பூஜை காலை 9.00 மணி சந்திர புஷ்கரணியில் தீர்த்தோற்ஸவம், திருவோணத்தீப பூஜை, மஹாயாக கும்பாபிஷேகம். மாலை துவஜா அவரோஹணம் சந்திர பிறைச் சேவை. |
| புரட்டாதி 18ஆம் நாள் (4.10.2006) புதவாரம் | காலை: காசி யாத்திரை நிச்சயதார்த்தம் மாலை: திருக்கல்யாணம் பூந்தண்டிகைச்சேவை |
| புரட்டாதி 19ஆம் நாள் (5.10.2006) குருவாரம் | மாலை: திருவூஞ்சல் பூந்தொட்டிச் சேவை |
| புரட்டாதி 20ஆம் நாள் (6.10.2006) சுக்கிரவாரம் | காலை: ஸ்ரீ மஹாலஷ்மி அபிஷேகம் மாலை: சுமங்கலி தீப பூஜை உற்ஸவம் |
| புரட்டாதி 21ஆம் நாள் (7.10.2006) சனிவாரம் | (மூன்றாம் சனிவாரம்) காலை: கருட சேவை மாலை: கருடச் சேவை |
| புரட்டாதி 22ஆம் நாள் (8.10.2006) ஆதிவாரம் | மாலை: வதிரி விருஷ் போக நாராயணர் உற்ஸவம் |
| புரட்டாதி 23ஆம் நாள் (9.10.2006) சோமவாரம் | காலை: பிராயச்சித்த அபிஷேகம் வாகன பூஜை மாலை: ஆஞ்சநேயர் அபிஷேகம், பொங்கல் உற்ஸவம் |
| புரட்டாதி 28ஆம் நாள் (14.10.2006) சனிவாரம் | (நான்காம் சனிவாரம்) காலை: கருடச்சேவை மாலை கருடச்சேவை |

| முற்பகல் | |
|---|---|
| காலை சந்திப் பூஜை | - 9.00 மணி |
| ஸ்தம்ப பூஜை | - 9.30 மணி |
| வசந்தமண்டபப் பூஜை | - 10.15மணி |

| பிற்பகல் | |
|---|---|
| சாயரட்டைப் பூஜை | - 2.45 |
| இரண்டாம் கால பூஜை | - 3.00 |
| ஸ்தம்ப பூஜை | - 3.15 |
| வசந்தமண்டபப் பூஜை | - 4.00 |

**குறிப்பு: காலச்சூழ்நிலைக்கேற்ப நேரம் மாற்றம் செய்யப்படும்.**

ஆதீன மஹாசபை,
ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
வண்ணை - யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2476

ஓம் விஸ்வ குலத்தாள்

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

*03.10.2005 அன்று இறைபதம் எய்திய*

செல்வன் **பொன்னுத்துரை சுபேந்திரன்** (ராசன்)



அவர்களின் முதலாம் ஆண்டு நினைவாக இன்று [22.09.2006] வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

என்றும் உன் நினைவில் வாழும்:
அன்பின் அப்பா, அம்மா, சகோதரிகள், தம்பி, மச்சான், மருமகன், மருமகள் மற்றும் உறவினர்கள், நண்பர்கள், சுபேந்திரன் நகைத்தொழிலகம், சசிகுமார் நகையகம், சுகந்தன் நகையகம்.

ந.பொன்னுத்துரை,
செல்லாச்சி அம்மையார் வீதி,
சுன்னாகம்.
(53832)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 25 - 09 - 1963



உதிர்வு 03 - 10 - 2005

**அமரர் கிட்டுணன் பரமேஸ்வரன்**

*[ஆசிரியர்-O.L.R]*

அன்பாக நீயிருந்து அரவணைப்பாய் என நாம் நினைக்க
எங்குதான் சென்றாய் எம்மிடம் ஏதும் கூறாமல்
பலகனவு நாம் கண்டு பரமேஸே நாம் இருக்க
பாவி எமைத் தவிக்கவிட்டு பரமனடி சேர்ந்தாயோ?

*விளையாட்டரங்க வீதி,*
*கோப்பாய் தெற்கு, கோப்பாய்.*
(53789)
*பிரிவால் துயருறும்:*
**மனைவி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்காணிப்புக் குழுத் தலைவரின் சில கருத்துகள் நோர்வே அரசுத் தரப்பின் நிலைப்பாடுகள் அல்ல!

## ஜனாதிபதி மஹிந்தவிடம் அந்நாட்டின் பிரதமர் நேரில் தெரிவிப்பு

கொழும்பு,செப்.2

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் தெரிவிக்கும் சில கருத்துக்கள் நோர்வே அரசின் நிலைப்பாடாகாது என நோர்வேப் பிரதமர் ஜென்ஸ் ஸ்டோட்டன் பேர்க், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 61 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள வருகை தந்த நோர்வேப் பிரதமர் நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தார். அந்தச் சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 61 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தின் ஆரம்பத் தினத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பின்போது இலங்கையின் சமாதான முன்னெடுப்புகள் தொடர்பாக நோர்வே அரசின் பங்களிப்பு குறித்தும், எதிர்காலத்தில் இது தொடர்பாக எடுக்க வேண்டிய நடைமுறைகள் குறித்தும் இரு தலைவர்களும் உரையாடினர். சுயாதீன நாடுகள் என்ற ரீதியில் இலங்கையும், நோர்வேயும் இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு மேலாக இரு தரப்பு உறவுகளை மேம்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இரு தலைவர்களும் பேச்சு நடத்தினர்.

நோர்வேயின் புதிய பிரதமராகப் பதவியேற்றுள்ள ஜென்ஸ் ஸ்டோட்டன் பேர்க், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கிடையிலான இந்தப் பேச்சுக்களில், இலங்கையின் சமாதானத்துக்காக நோர்வே அரசு மேற்கொண்டுள்ள பொறுப்புகளைப் போலவேதான் நடைமுறைப்படுத்தவுள்ள சமாதான நடைமுறைகளின் நிலைப்பாடுகள் தொடர்பாகவும் தெளிவுபடுத்திய ஜனாதிபதி, சமீபத்தில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் புலிகளின் தாக்குதல்களுக்கான பதில் தாக்குதல்களெனவும் சுட்டிக் காட்டினார்.

புலிகள் பயங்கரவாத நடவடிக்கைகளையும், படுகொலைகளையும் நிறுத்தினால் அரசு எந்த நேரத்திலும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கத் தயாராகவிருப்பதாகவும் ஜனாதிபதி நோர்வேப் பிரதமரிடம் தெரிவித்தார்.

இப்பேச்சுக்களில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பலிஹக்கார ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ)

## லயன்ஸ் கழகத்தின் மருத்துவ சேவை

தென்மராட்சி,செப்.22

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் மீசாலைப் பகுதியில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கான இலவச மருத்துவ முகாமை நடத்தினர்.

மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவிலுக்கு அருகில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட மருத்துவ முகாமில் நோயாளிகளுக்கு மருந்துகள் வழங்கப்பட்டன.

டாக்டர் எஸ். எஸ்.அருளானந்தம், டாக்டர் செல்வி கந்தையா ஆகியோர் முகாமில் கலந்துகொண்டவர்களைப் பரிசோதித்ததாக கழகத் தலைவர் லயன் வ.ஸ்ரீபிரகாஸ் தெரிவித்தார். (ப-117)

# ஊடகவியலாளர்களைப் பலிகொடுத்துவிட்டு புலிகள் மீது பழிபோட இராணுவம் முயற்சி

## விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி,செப்.2

போர் முனைக்கு ஊடகவியலாளர்களை அழைத்துவந்து பலி கொடுத்துவிட்டுப் புலிகள் மீது பழிபோட இராணுவம் சதி முயற்சியை மேற்கொண்டு வருகிறது என்று விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியிருக்கின்றனர்.

இது தொடர்பாக புலிகளின் சமாதான செயலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஸ்ரீலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கும் இடையே உள்ள முகமாலை முன்னரங்கக் காவலரண் பகுதிக்குக் கொழும்பிலிருந்து சர்வதேச நிறுவனங்களின் ஊடகவியலாளர்களை ஸ்ரீலங்கா இராணுவம் அழைத்துச் சென்றதாக சில சர்வதேச நிறுவனங்கள் செய்திவெளியிட்டுள்ளன.

கடந்த ஓகஸ்ட் 10 ஆம் திகதி முதலே முகமாலை முன்னரங்க நிலைகளில் கடும் மோதல் நடைபெற்று வருவதாக ஸ்ரீலங்கா இராணுவமே கூறியுள்ளது.

வடக்கு - கிழக்கில் இயங்கி வரும் சர்வதேச நிறுவனங்கள் தொடர்பிலான குழுவும் கடந்த செப்டெம்பர் 18 ஆம் திகதியன்று கிளிநொச்சியில் வெளியிட்ட அறிக்கையில்,''கடந்த வாரம் பகல், மாலை மற்றும் இரவு நேரங்கள் முழுவதும் எறிகணை வீச்சுகள் நடைபெற்று வருகின்றன'' என்று தெரிவித்துள்ளது.

அண்மைய எறிகணைத் தாக்குதலைத் தொடர்ந்து கிளிநொச்சியில் பணியாற்றும் நிறுவனங்களும், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசனையின்றி பணி செய்யும் பகுதிகளுக்குச் செல்வதில்லை.

எறிகணை வீச்சு நடைபெறும் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தெரிவிக்காமல் ஊடகவியலாளர்களை ஸ்ரீலங்கா இராணுவம் அழைத்து வந்தது ஏன்?

இந்த மோதலில் ஒன்றிரண்டு ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டு, தமிழீழ விடுதலைப் புலிகள் மீது பழிபோட ஸ்ரீலங்கா இராணுவம் திட்டமிட்டிருப்பதாக நாங்கள் நம்புகிறோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கவனத்துக்குக் கொண்டுவராமலும், அனுமதி பெறாமலும் ஊடகவியலாளர்களை எறிகணை வீச்சுப் பகுதிக்கு அழைத்துச் சென்றிருப்பதானது ஊடகவியலாளர்களின் உயிர்களை அலட்சியம் செய்கின்ற இரக்கமற்ற செயலாகும்.

ஊடகவியலாளர்களை இத்தகைய இக்கட்டான நிலைமைக்குத் தள்ளுவது குறித்து நாம் விசனமடைகிறோம். என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

### கெற்பேலி மத்தியில்

# 10 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்ட மரக்கறிகள் அழிவடையும் நிலை

யாழ்ப்பாணம்,செப்.22

தென்மராட்சி, கெற்பேலி மத்திப் பகுதியில் இருந்து 23இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளமையால் அப்பகுதியில் சுமார் 10 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்ட மரக்கறிப்பயிர்கள் அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்தமாதம் 11ஆம் திகதி ஏற்பட்ட அசம்பாவிதங்கள் மற்றும் உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக அப்பகுதிமக்கள் அங்கு குடியிருக்கமுடியாமையால் வெளியேறியுள்ளனர். அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள் உறவினர் வீடுகளிலும், மர நிழல்களிலும் தங்கியுள்ளனர்.

இதன்காரணமாக அவர்களால் பயிரிடப்பட்ட மிளகாய், பயிற்றை, பாவல், புடோல் போன்ற பயிர்களுக்கு உரியநேரத்தில் தண்ணீர் பாய்ச்சவோ, பசளையிடவோ முடியாதுள்ளது. இதனால் பயிர்கள் அழிவடையும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்று கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-203)

## தென்னிலங்கை பத்திரிகையாளர் யாழ்.நகருக்கு வந்தனர்

யாழ்ப்பாணம், செப்.22

தென்னிலங்கைப் பத்திரிகையாளர் மற்றும் படப்பிடிப்பாளர் நேற்றுமுன்தினம் யாழ். நகரப் பகுதிக்கு வந்து நிலைமைகளை அவதானித்தனர். பலத்த பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்ட அவர்கள், மக்களுடன் கலந்துரையாடி இங்குள்ள நிலவரங்களை கேட்டறிந்தனர்.

### பொத்துவில் சம்பவத்துக்கு சர்வதேச விசாரணை?

# கெப்பிற்றிக்கொலாவை படுகொலைகளுக்கு ஐ.நா. விசாரணையைக் கோராதது ஏன்?

## கேள்வி எழுப்புகிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு,செப்.2

''பொத்துவிலில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு ஐக்கிய நாடுகளின் விசாரணைகளைக் கோருவோர் முன்னர் கெப்பிற்றிக்கொலாவைச் சம்பவத்தின்போது சர்வதேச விசாரணைகளைக் கோராமல் மௌனமாக இருந்தது ஏன்?''

- இவ்வாறு கேள்வியெழுப்பினார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ். இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது மேற்கண்டவாறு கேள்வியெழுப்பிய அவர் மேலும் கூறியதாவது:-

''பொத்துவிலில் முஸ்லிம்கள் கொல்லப்பட்டதற்காக ரவூப் ஹக்கீம், ஐக்கிய நாடுகள் விசாரணை நடத்தக் கோருகிறார். புலிகள் செய்த கொலைக்கு ஐ.நா. விசாரணை ஏன் தேவை? அப்படியானால், கெப்பிற்றிக்கொலாவைப் படுகொலைக்கும் ஐ.நா. விசாரணையைக் கோரியிருக்கலாமே?

ஐக்கிய நாடுகளின் அமைதிப்படையைக் கொண்டு வருவதற்கும், ஐ.நா. தலையீட்டை அதிகரிப்பதற்கும் இவ்வாறு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. ஐ.நா. என்ற நாமத்தை வைத்து சூடானை அச்சுறுத்துவதுபோல் இலங்கையிலும் ஒரு நிலைமையை ஏற்படுத்த முயற்சிக்கின்றார். இது மிகவும் தவறானது.'' - என்று கூறினார் விமல் வீரவன்ஸ எம்.பி. (ஐ)

# சிறகுவலையை நம்பி வாழும் பாஷையூர் மீனவர் குடும்பங்கள் நிர்க்கதிக்குள்!

## அந்தோனியார் கூட்டுறவுச் சங்கம் அரச அதிபருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், செப்.22

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக சிறகு வலையை நம்பிக் கடற்றொழிலில் ஈடுபட்ட வந்த நூற்றுக் கணக்கான மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக பாஷையூர் புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் கூட்டறவுச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் கடற்றொழில் சங்கங்களின் சமாசத்தினர், கடற்றொழில் சங்கங்களின் சம்மேளனத்தினர், யாழ். அரச அதிபர், யாழ்.மனித முன்னேற்ற நடு நிலையத்தினர் ஆகியோருக்கும் யூ.என்.எச்.சி.ஆர்., ஐ.ஓ.எம்., வேள்ட் விஷன், யாழ். ஆயர் இல்லம் ஆகியவற்றுக்கும் மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நூற்றுக்கு தொண்ணூறு வீதம் சிறகு வலைக் கடற்றொழிலையே வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள். பாஷையூர் மக்களின் சிறகுவலைத் தொழில் நடைமுறையின்படி தொழில் உபகரணங்களான வலைகள், தடிகள், பைப்புகள் என்பன கடலில் 15 நாள்களுக்கு மேல் நடப்பட்டிருக்கும். பின்னர் கரைக்கு எடுத்து வரப்பட்டு சேதங்கள் திருத்தப்பட்டு 4 அல்லது 5 நாள்களின் பின் மீண்டும் கடலில் நடப்படும்.

கடந்த கால அனுபவங்களின்படி குடாநாட்டில் எங்காவது தாக்குதல்கள் நடந்தால் அல்லது நிகழ்வதற்குரிய அறிகுறிகள் தெரிந்தாலோ கல்முனை, மண்டைதீவுக்குட்பட்டதும் கிழக்கே கேரதீவு வரையிலானதுமான பாஷையூர் மக்கள் களங்கட்டி நடும் இடங்களில் கடல் தடைச்சட்டம் நடைமுறைக்கு வந்து விடும்.இந்த நிலையில் எமது மக்களின் தொழில் பாதிக்கப்படுவதும் வருமானம் அற்றுப் போவதும் வழக்கமாகி விடுகின்றது.

தற்போதைய நெருக்கடிநிலை காரணமாக 311 தொழிலாளர்களின்(வலைகள், தடிகள், பைப்புகள் மட்டும்) தொழில் சேதம் நூற்றி 36 லட்சத்து 39 ஆயிரம் ரூபாவாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

எமது முயற்சியால் சிறுகச் சிறுகச் சேர்த்தவையெல்லாம் மொத்தமாக ஒரே தடவையில் இழப்பது ஒருமுறையல்ல பல தடவைகள் நிகழ்ந்த வண்ணமுள்ளன.

எனவே, நாளைய பொழுதை எதிர்கொள்ளச் சக்தியற்று எதிர்காலத்தைக் கேள்விக்குறியோடு நோக்கி நிற்கும் எமது கிராமத் தொழிலாளர்களுக்கான ஒரு தனி நிவாரண உதவித் திட்டம் பற்றிய வழியினை ஏற்படுத்தி எமக்கு உதவ ஆவன செய்வதோடு எமது தொழிலாளர் தொழில் புரிவதற்குரிய புறச் சூழலை ஏற்படுத்தித் தரும் வண்ணம் தங்களை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம். - என்றுள்ளது. (ப-203)



கடந்த மாதம் 10 ஆம் திகதி முகமாலையில் நிறுத்தப்பட்ட வாகன[illegible] வாகனங்களை எரிந்து பலத்த சேதத்திற்கு உள்ளாகிய செய்தி கடந்த செவ்வாயன்று உதயனில் வெளிச் யானது தெரிந்ததே. எரிந்த லொறிகளையே மேலே உள்ள படங்களில் காண்கிறீர்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஸ்ரீமத் நல்லைநாயகி சமேத ஸ்ரீ நல்லைநாத சுவாமி தேவஸ்தானம், (சட்டநாத சிவன் கோயில்), நல்லூர்

1. **சனீஸ்வர ஹோமம் 07.10.2006, 14.10.2006** ஆகிய சனிக்கிழமைகளில் நடைபெறும் தோஷம் உள்ளவர்கள் பங்குபற்றுவது பரிந்துரைக்கப்படுகிறது.

2. **சனீஸ்வரருக்கு தண்ணீர் வார்த்தல், எள் ளுச்சட்டி எரித்தல்** முதலிய சனீஸ்வர பிரீதிகளைச் செய்வதற்கு சகல புரட்டாதிச் சனிக்கிழமைகளிலும் வசதிகள் ஏற்படுத்தப்படுகின்றன.

**தோஷ ராசிகளும் நட்சத்திரங்களும்**
மேடம் - அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்
மிதுனம் - மிருகசீரிடம் 3-4, திருவாதிரை, புனர்பூசம் 1-2-3
கர்க்கடகம் - புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்
சிங்கம் - மகம், பூரம், உத்தரம் 1
விருட்சிகம் - விசாகம் 4, அனுஷம், கேட்டை
தனு - மூலம், பூராடம், உத்தராடம் - 1
மகரம் - உத்தராடம் 2-3-4, திருவோணம், அவிட்டம் 1-2
மீனம் - பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

3. **கௌரிவிரத அபிஷேகம்**
தினமும் 2.10.2006 தொடங்கி 21 நாள்கள் நடைபெறும். தனிக்காப்பு, பெட்டிக்காப்பு பெறலாம்.

(53850) **- தேவஸ்தானம்.**

## நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி ஸ்தாபகர் நினைவு தினம்

தோற்றம் 18 - 08 - 1887



இறப்பு நினைவலையில் 22 - 09 - 1961

**அமரர் அத்தியார் அருணாசலம்**

அத்தியார் இந்துக்கல்லூரி
அறிவாலயத்தின் ஆணிவேரே!
அகலா நினைவோடு உங்களை என்றும் ஆராதிக்கும்

'அத்தியகம்'
நீர்வேலி மத்தி,
நீர்வேலி. (53839)

குடும்பத்தினர், மருமகள், பாலா ரீச்சர்,
திரு.திருமதி ந.சிவகுமாரன்
(பேரப்பிள்ளைகள்)

## மரண அறிவித்தல்கள்

### மாமகேஸ்வரி அரியநேசன்



கொக்குவில் மேற்கு, கொக்குவில்லைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட மாமகேஸ்வரி (உமா) அரியநேசன் அவர்கள் 19.09.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைச்சாமி - சின்னத்தங்கச்சி தம்பதியரின் மகளும் அரியபுத்திரன் இராசமணி தம்பதியரின் மருமகளும் அரியநேசனின் அன்பு மனைவியும் பாரியலக்ஷ்மி, அர்சுணன், தாணியலக்ஷ்மி ஆகியோரின் அன்புத் தாயும கோபாலகிருஷ்ணன், விண்டா ஆகியோரின் மாமியும் நாகசுந்தரி, புவனசுந்தரி, சறோஜினி, சுதர்மராஜ், ஊஷாதேவி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 121, கேணியடிலேன், கொக்குவில் மேற்கில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

121, கேணியடி லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (53845)

தகவல்:
நாகசுந்தரி,
உஷாதேவி (சகோதரிகள்)

### கந்தையா அசுபதி

*(முன்னாள் சாரதி, இ.போ.ச. யாழ்ப்பாணம், டோகா, கட்டார்)*

மானிப்பாய் வடகிழக்கைச் சேர்ந்த கந்தையா அசுபதி அவர்கள் நேற்றுமுன்தினம் (20.09.2006) புதன்கிழமை டோகா கட்டாரில் காலமானார்.

அன்னார் கனகம்மாவின் பாசமிகு கணவரும் சிவறஜனி (யாழ். ப.நோ.கூ. சங்கம்), சுகந்தினி, சர்வேந்திரன் (டோகா), சுதாஜினி, ஜெகதாஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயராசசிங்கம், பரமசிவம் (இ.போ.ச. கோண்டாவில்), சுகந்தன் (டோகா) இராசகரன் ஆகியோரின் பாசமிகு மாமனும் சங்கீதா, பிரமிலன், மலரவன், பிரவீன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் வட. கிழக்கு.

தகவல்:
சி.ஜெயராசசிங்கம் (மருமகன்).

### விற்பனைக்கு

18" TV, Fridge, Greatdane பெண் நாய், Dish Antena மட்டும் விற்பனைக்குண்டு.
Pragash,
95, Palaly Road (இலுப்பையடிச் சந்திக்கருகில்),
Jaffna.

### விற்பனைக்கு

பாவனையிலுள்ள சன்டெல் தொலைபேசி புதிய பற்றறியுடன் (62AMP) கூடிய சோலர் (20W), புதிய DVD செட், (Samsung) அம்பிளிபயர் (300W) ஆகியன உடன் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தொடர்பு கொள்ளவும். தொடர்பு: 021 4590784

### கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் பழைய மாணவரும் தனது சேவைக்காலத்தின் ஆரம்பம் முதல் இறுதிவரை ஆசிரியராகவும், உப அதிபராகவும் ஏறக்குறைய முப்பது வருடங்களுக்கு மேலாக எமது கல்லூரியில் கடமையாற்றி அண்மையில் கனடாவில் காலமாகிய

**உயர்திரு. A.C. செல்வராஜா**

அவர்களை நினைவுகூர்ந்து அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(53853)
கிறிஸ்தவ மன்றம்
யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

## முள்முருக்கையில் புதுவிதமான நோய்

நவாலி,செப்.22

குடாநாட்டில் முள்முருக்கை மரங்களில் ஒரு புதுவிதமான நோய் தோன்றியுள்ளது. இதனை யானைக்கால் நோய் என்று அழைக்கின்றார்கள்.

இந்த நோய் மரங்களின் கதிகால்களின் நுனிக்குருத்திலிருந்து ஆரம்பமாகின்றது. கதிகால்கள் ஓரளவு வளர்ந்தவுடன் அதன் குருத்துக்கள் திடீரென சப்பைக் காயாக மாறிவிடுகின்றன.

இவற்றை ஆடு, மாடுகள் சாப்பிட்டால் வயிற்றோட்ட நோய் ஏற்படுவதுடன் உணவு உண்ணமுடியாத நிலையும் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது. இதனால் நவாலி, ஆனைக்கோட்டைப் பகுதிகளளில் முள்முருக்கை மரங்களை முற்றாக அழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப-100)

**கோண்டாவில் ஆஸ்பத்திரிக்கு தற்காலிகமாக அம்புலன்ஸ்**

கோண்டாவில் அரசினர் வைத்தியசாலைக்கு தற்காலிகமாக அம்புலன்ஸ் வண்டி ஒன்று வழங்கப்பட்டிருக்கிறது.

தற்போது நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாகக் காயப்படும், நோய்வாய்ப்படும் பொதுமக்களை மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு இரவு நேரத்தில் கொண்டுசெல்லவே இந்த அம்புலன்ஸ் வண்டி வழங்கப்பட்டிருக்கிறது.

கோண்டாவில் வைத்தியசாலையில் தொலைபேசி வசதி இன்மை, சாரதி பற்றாக்குறை போன்ற காரணங்களால் இரவு நேரத்தில் மட்டும் அந்த அவசர சேவை ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ப-49)

**பதில் கடமை ஏற்றுள்ளார்**

யாழ்.பிரதேச செயலராக பா.செந்தில் நந்தனன் எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரை பதில் கடமை புரியவுள்ளார். யாழ். பிரதேச செயலராகக் கடமைபுரிந்த எம். பற்றிக் டிறஞ்சன் கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளராகப் பதவி உயர்வு பெற்றுச்சென்றுள்ளார். இதனையடுத்து கடந்த 15ஆம் திகதி முதல் செந்தில்நந்தனன் பதில் கடமை ஏற்றுள்ளார். (ப-190-203)

### Jaffna Study Center of Colombo Theological Seminary

கொழும்பு இறையியல் கல்லூரி, யாழ். நிலையம்

**கிறிஸ்தவ ஊழியர் பயிற்சி நெறி**

பாடம்: பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் (OT Prophets)
விரிவுரையாளர்: போதகர் றொபேட் பாலசிங்கம்
திகதி: செப்ரெம்பர் 25 - 29 வரை, காலை 8.30-2 மணி வரை
இடம்: (C.T.S.-Jaffna Center, 32/1, விதானையார் ஒழுங்கை,
கண்டுக்குளி, யாழ். நகர்.
(53824)

### கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை செல்வி சந்திரகுமாரி கனகரத்தினம் அவர்களின் அன்புத் தந்தை

**சுப்பிரமணியம் கனகரத்தினம்**

அவர்கள் இறைபதமடைந்துள்ளார். அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன், அவரது குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.
(53844)

### இதயம் நெகிழ்ந்த அஞ்சலி

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனத்தில் பணியாற்றிய எமது சக ஊழியர்



**தர்மலிங்கம் முரளிதரன்**

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

இல.63, பலாலி வீதி,
திருநெல்வேலி.

வெண்புறா செயற்கை உறுப்பு
தொழில்நுட்ப நிறுவனப் பணியாளர்கள்.
(53846)

### கண்ணீர் அஞ்சலி



19.09.2006 அன்று சிவபதமடைந்த

**உ.வைத்தீஸ்வரக்குருக்கள் கனகசபாபதிக் குருக்கள்**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

வை.விருத்தகிரீசக் குருக்கள்
(பிரதம குரு, உலவிக்குளம் பிள்ளையார்
கோயில், அச்சுவேலி வடக்கு)
மற்றும் குடும்பத்தினர்.
(53842)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 18 - 04 - 1953



மறைவு 23 - 08 - 2006

அமரர்

**அப்பாத்துரை விமலநாதன் (நாதன்)**

திதி - அமவாசை

நாள்கள் முப்பத்தொன்று சென்றாலும்
மறக்குமா உங்கள் கனிவு முகம்
எங்கு சென்றீர் அப்பா
எமை இங்கு தவிக்கவிட்டு
மறப்போமா உங்களை நாங்கள்
என்றும் நும் நினைவுகள் எம்முடனேயே...
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

இன்று வெள்ளிக்கிழமை(22.09.2006) எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும்படி அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

(53848)

தகவல்
தாய், மனைவி,
பிள்ளைகள், மருமகன், பேர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்
பணியாளர் தேவை

பதவி - எழுதுவினைஞர்
தகமை - 5 வருட முன் அனுபவம்
வயது - 45 இற்கு மேல்

எமது சங்க சுற்றுப் பரப்பில் 3k.m. க்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை. 23.09.2006 அன்று நேரில் சமுகமளிக்கவும். நேரம் 10.30 மணி.
559, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(கைலாச பிள்ளையார் கோயில் அருகே).
(சி-51030)

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா பசில் அன்ரன்

**(ஓய்வுபெற்ற மிருக மருத்துவர்)**



கரம்பனை பிறப்பிடமாகவும் நாரந்தனையையும் அதன் பின்னர் தெஹிவளை இல.76, பொக்குண றோட், கௌடான வீதியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த **C.B**.அன்ரன் அவர்கள் 19.09.2006 அன்று காலமானார்.

அன்னார் சறோஜினியின் அன்புக் கணவரும், பேபி (லண்டன்),காலஞ் சென்றவர்களான செல்லத்துரை துரைநாயகம், அருளானந்தம், (யோ) வில்லியம் பவளம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மாலினி (கனடா), வனஜா (கனடா), பெபியன் (யூட்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பத்மநாதன் (கனடா), **J.**வீரசிங்கம் (கனடா), தி.நிரஞ்சினி (கொழும்பு) ஆகியோரின் மாமனாரும், புஸ்பம், அருட் சகோதரி பிறசில்லா (திருக்குடும்ப கன்னியர் மடம்) காலஞ்சென்ற றெஜீனா, அருமைநாயகம் (கொலண்ட்), தேவநாயகம் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், ஜெனிபர், டிலிசியா, கவின் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு நேற்று (21.09.2006) பிற்பகல் 3 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பிற்பகல் 4 மணியள வில் கல்கிசை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரு ் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

கொழும்பு.
T.P:0115688509,
0713177307
(சி-51025)

தகவல்:
அன்பு மகன்
பெபியன் (யூட்)

## திருமதி சிவபாக்கியம் துரைராசா

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும், டச்சு வீதி, சித்தன் கேணியை வதிவிடமாகவும் மூளாய் வீதி வட்டுக்கோட்டையை தற்போதைய் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் துரைராசா நேற்றுமாலை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும் சித்தன்கேணியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தம்பையா - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற துரைராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகநாதன் மற்றும் நாகராணி, கோணேசநாதன், ஆனந்தகுமார், குகனேசன் ஆகியோரின் அன்புத் தாயும், சத்தியபாமா, தேவராசா, வசந்தகுமாரி, பவளராணி, ரேணுகா ஆகியோரின் அன்பு மாமியும் துஷ்யந்தன், யசோதை, டினேஷ், லுசாந்தி, ரவிராஜ், விதுஷா ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் மூளாய் வீதி, வட்டுக்கோட்டையில் நடைபெற்று, பூதவுடல் 11 மணியளவில் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மூளாய் வீதி,*
*வட்டுக்கோட்டை.*

தகவல்
நவம் கோணேசநாதன்.

# அமைதி நிலவவேண்டி வல்லிபுரத்தில் பிரார்த்தனை

வடமராட்சி,செப்.22

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் நாட்டில் சாந்தி சமாதானம் அமைதி நிலவ வேண்டி நேற்று முற்பகல் பிரார்த்தனை நடத்தப்பட்டது.

ஆலயப் பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இதனைத் தொடர்ந்து சமாதானம் அமைதி நிலவ வேண்டிப் பிரார்த்தனை நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (173-203)

# தென்மராட்சிப் பிரதேச சுகாதாரத்துறை அலுவலர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,செப்.22

தென்மராட்சிப் பிரதேசத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்களும், தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள வைத்திய நிறுவனங்களை நிரந்தர கடமை புரியும் வைத்திய நிறுவனமாக கொண்டவர்களும் எதிர்வரும் 25ஆம் திகதியில் இருந்து தங்களின் நிரந்தர பணி நிறுவனங்களில் பணியாற்றுமாறு பணிக்கப்படுகின்றனர் என்றும் -

தற்காலிகமாகப் பணிபுரிபவர்களை சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவர்கள் உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் - யாழ். பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

# சமுர்த்தி நிவாரண முத்திரை விநியோகம்

யாழ்ப்பாணம்,செப்.22

யாழ்.பிரதேச செயலகப் பிரிவின் யாழ். நகர் மேற்கு சமுர்த்தி வலயப் பிரிவுக்கான (ஜே/75 முதல் ஜே/88 வரை) சமுர்த்தி நிவாரண முத்திரை விநியோகம் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமானது.

ஏற்கனவே சமுர்த்தி நிவாரண முத்திரை பெறுவோர் தத்தமது சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

# அல்வாயில் தேடுதல்

வடமராட்சி,செப்.22

வடமராட்சி அல்வாய் கிழக்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் படையினர் பாரிய சுற்றிவளைப்புத் தேடுதல்களை நடத்தியுள்ளனர்.

இதன் போது எவரும் கைதுசெய்யப்பட்டதாகத் தெரியவரவில்லை. (1-173-203)

# 'உ' அட்டை வைத்திருப்போருக்கு உலர் உணவு

தென்மராட்சி,செப்.22

சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கக் கிளைக் கடைகளில் 'உ' பங்கீட்டு அட்டை வைத்திருப்போருக்கு உலர் உணவுப் பொருள்கள் நேற்றுமுன்தினம் தொடக்கம் வழங்கப்பட்டு வருகின்றன. மேற்படி பொருள்களை நாளை சனிக்கிழமைக்கு முன் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (117)

# அரச அதிபருக்கு வர்த்தக மன்றம் தெரிவிக்கும் பாராட்டு

யாழ்ப்பாணம்,செப்.22

நெருக்கடியான காலகட்டத்தில் குடாநாட்டில் மீண்டும் மின்சாரம் வழங்கப்படுவதற்கான துரித நடவடிக்கை எடுத்தமைக்காக யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் கே.கணேஷை யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றம் பாராட்டியுள்ளது.

அரச அதிபரின் இந் நடவடிக்கையால் குடாநாட்டிலுள்ள குடியிருப்பாளர்கள், காரியாலயங்கள், ஸ்தாபனங்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் பயனடைந்துள்ளனவென்று மன்றம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் மின்சாரம் காலையில் வழங்கப்படும் நேரத்தை அதிகாலையென்றில்லாமல் காலை 9 மணியிலிருந்து மதியம் 2 மணிவரை என்று மாற்றப்பட்டால் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும் என்றும் மன்றம் தெரிவித்துள்ளது. (ப)

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை அன்னம்மா

நவாலி தெற்கை பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்துரை அன்னம்மா நேற்று (21.09.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும், மரியமலர் செலஸ்ரீன், பிலேந்திரன் ஜோன் பப்ரீஸ் (ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி) ஞானசீலம் (சீலன் ஓட்டோ கராஜ், யாழ்ப்பாணம்) ஜெயக்குமார் (ஏசியன் டெக்ஸ்ரைல்ஸ்) சில்வெஸ்டர் நவநாயகம், ஜெயபாலன் (டென்மார்க்) ஜெயமலர்(கொலண்ட்) ஜோன்சன் (லண்டன்) றொபின்சன் ஆகியோரின் அன்புத் தாயும் தேவதாஸ், எட்விஸ்றூபி, அலிஸ்ரஞ்சனி, எப்ஸியா, பிலோமினா மேரி பொலின் தயா, ராணி, ஜெயம், சந்திரா, மகிழ்மலர் ஆகியோரின் மாமியும் ஜெனிங்தாஸ் (ஆசிரியர், கொழும்பு) கருணதாஸ் (ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி) பாலதாஸ் (ஆசிரியர், வவுனியா) ஷர்மிளா (கொழும்பு) காலஞ்சென்ற ஜீவதாஸ், தர்ஷன் (டாக்டர், யாழ்.போதனா வைத்தியசாலை) அனிற்றா (ஆசிரியர், மானிப்பாய் மெமோறியல்) கவிதா, விஜிதா, நிறூபன், நிரோஜன், ஸ்டீபன், செரூபா, மெரிலா, சில்வியா, கில்டன், சிளுன், ஷமிந்ரா, றொமி ஜீன், ரொணி, லிபிஷியா, றெபீனா, கிறிஸ்டியா, பிருந்தா, ஜெனீபர், ஷோபியா, நிறூஜன், சௌமியா மரீன், கிறிஸ்டீனா ஆகியோரின் பேர்த்தியும், ஜமீஸ், ஜனூஸ் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22.09.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நவாலி தெற்கு,*
*மானிப்பாய்.*
(53861)

தகவல்:
ஜெயக்குமார் (மகன்)

# உள்ளகப் பயிற்சி ஆசிரியருக்கு கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,செப்.22

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கான ஓகஸ்ட் மாதக் கொடுப்பனவு நாளை சனிக்கிழமை காலை 9 மணிமுதல் கல்லூரியில் இயங்கும் வங்கி மூலம் வழங்கப்படவுள்ளது.

உள்ளகப் பயிற்சி பெறும் ஆசிரியர்கள் வரவுச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்து கொடுப்பனவைப் பெறுமாறு கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் கேட்டுள்ளார். (1)

# மரண அறிவித்தல்கள்

## கனகலிங்கம் சண்முகலிங்கம்

**(முன்னாள் ஊழியர், நல்லூர் ப.நோ.கூ.சங்கம்)**

நாவலர் வீதியைப் பிறப்பிடமாகவும், இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கனகலிங்கம் சண்முகலிங்கம் 19.09.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகலிங்கம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், மயில்வாகனம் - கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும் ஞானேஸ்வரியின் பாசமிகு கணவரும் இமயகுமாரியின் அன்புச் சகோதரனும், கிருபாகரன், சுதாசினி (கனடா) ஸ்ரீகரன், விஜயகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பரமேஸ்வரனின் (கனடா) அன்பு மாமனும், புவனேஸ்வரி, லோகேஸ்வரி (வேலணை ப.நோ.கூ.சங்கம்) ஞானேஸ்வரன் (ஜேர்மனி) உமாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் 20.09.2006 புதன்கிழமை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வெள்ளைப்பிள்ளையார் கோயிலடி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*நல்லூர்.* (53846)

தகவல்:
பேரமக்கள்,
துளசிதாசன், சாயிதர்மினி
(வேலணை மேற்கு) கௌரி, பிரசன்னா.

## நடராசா தவராசா

**(தபால் ஊழியர் தெல்லிப்பழை)**



தையிட்டிப்புலம், தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா தவராசா நேற்று (21.09.2006) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும், கந்தையா தம்பதியரின் மருகனும் திலகேஸ்வரியின் அன்புக்கணவரும், நிலக்ஷிகா, திலக்ஷிகா ஆகியோரின் தந்தையும், தவபாலசிங்கம், தனபாலசிங்கம், சிவசுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரரும், மங்கையர்திலகம், யோகேஸ்வரி, இராசேஸ்வரி, நாகராசா, வரதராசா ஆகியோரின் மைத்துனருமானவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2006) முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுழிபுரம் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொல்புரம், சுழிபுரம்.* (53863)

தகவல்
மனைவி, பிள்ளைகள்.

## தர்மலிங்கம் முரளீதரன்

புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட தர்மலிங்கம் முரளீதரன் (Project District Co-ordinator வெண்புறா நிறுவனம் - Unicef fund Project) நேற்று (21.09.2006) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இ.தர்மலிங்கம் (முன்னாள் சுகாதார போதனாசிரியரும், பாடநூல் எழுத்தாளரும்) - பரமேஸ்வரி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் அனுசாதேவியின் அன்பு கணவரும் தனுசனின் அன்பு தந்தையும், வைத்தியகலாநிதி இ.நன்னித்தம்பி (அகில இலங்கை சமாதான நீதிவான்) பத்மாவதி தம்பதிகள், செல்வி தேவி, அம்பலவாணர் (ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியை) ஆகியோரின் அன்பு பெறாமகனும், டாக்டர் திருமதி. இந்திரா சத்தியநாதன் (முன்னாள் பொறுப்பதிகாரி கைதடி ஆயுள் வேத வைத்தியசாலை), திருமதி.லோகராணி பாலேந்திரன், திருமதி.விஜயராணி பத்மநாதன், திருமதி யோகராணி வன்னியசேகரம், திருமதி.தர்மராணி ஜெகநாதன் (சுவிஸ்), சிறீஸ்கந்தராசா, சண்முகதாசன் (Former Manager H.N.B Ltd, Manager seylon Bank Ltd, Magaragama) யுகேந்திரராஜா, தயாபரன், நந்தகுமாரன் (Teacher, St.John's College, Jaffna) திருமதி.தயாவதி சபாநடேசன் (கனடா) ஆகியோரின் அன்பு தம்பியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு பொரளை றேமன்ஸ் மலர்சாலையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, 24.09.2006 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆயக்கடவை பிள்ளையார் கோயிலடி,
புன்னாலைக்கட்டுவன்.
(53862)

தகவல்:
த.நந்தகுமாரன் (சகோதரன்)
(ஆசிரியர், சென் ஜோன்ஸ் கல்லூரி).

## செல்வி வள்ளியம்மை சின்னப்பு

வட்டு.தென்மேற்கு, வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி வள்ளியம்மை சின்னப்பு நேற்று (21.09.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், திருமதி ராஜலக்சுமி வைத்திலிங்கம், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், நடராஜா, தாமோதரம்பிள்ளை, நேசமணி, செல்வரத்தினம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரியும், சிவசுதன், வீரசுதன், ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (21.09.2006) வியாழக்கிழமை பி.ப.2.30 மணிக்கு அன்னாரது வட்டுக்கோட்டை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வட்டு.தென்மேற்கு,*
*வட்டுக்கோட்டை.*

தகவல்:
Dr.தங்கராசா வீரசுதன்
(போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுக்கு வரப் புலிகள் ஆயுதங்களை கீழே'வைக்கவேண்டிய அவசியமில்லை

## சமாதான தினச் செய்தியில் அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

கொழும்பு, செப். 23

புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்து விட்டுத்தான் சமாதான மேசைக்கு வரவேண்டும் என அரசு எதிர்பார்க்கவில்லை. யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகள் பலப்படுத்தப்பட்டு மேமைக்கப்பட வேண்டும். இதன் மூலமே யுத்தமில்லாத சமாதானச் சூழலை நாம் உருவாக்க முடி யும்.

-இவ்வாறு விஞ்ஞான தொழில்நுட்பவியல் அமைச்சரும் சர்வகட்சி மாநாட்டின் ஆலோசனைக் குழுத் தலைவரு மான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சர்வதேச சமாதான தினச் செய்தியை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு விஞ்ஞான தொழில்நுட்பவியல் அமைச்சில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் தொடர்ந்தும் கூறுகையில்:-

1983ஆம் ஆண்டு ஆரம்பமான யுத்தம் ஓர் ஆயுதக் கலாசாரத்தை தோற்றுவித்துள்ளது. இதன் மூலம் உயிர், உடைமை இழப்புகளே ஏற்படுகின்றன. இதிலிருந்து நாம் மீள வேண்டும். யுத்தத்தை எவரும் விரும்புவதில்லை. சமாதானமே சகலரினதும் ஒரே எதிர்பார்ப்பு - என்றார்.

## ரவிசங்கர் குருஜீ வன்னியில்

கிளிநொச்சி.செப்.22

வாழும்கலை நிறுவனத்தின் ஸ்தாபகர் ஆன்மீகவாதி ரவிசங்கர் குருஜி விஜயம் ஒன்றை மேற்கொண்டு வன்னிவந்து சேர்ந்தார்.

நேற்று முன்தினம் கொழும்பு வந்து சேர்ந்த ரவி சங்கர் குருஜீ நேற்று விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியான கிளிநொச்சியை நேற்று வந்தடைந்தார் என செய்திகள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சியை வந்தடைந்த ரவி சங்கர் குருஜீ நேற்று மாலை விசேட சந்திப்புக்களில் கலந்துகொண்டார் என கூறப்பட்டது. எனினும் இச்சந்திப்புக்களில் ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பாக தெரியவரவில்லை.

## கடற்படை விசேட குழு

கொழும்பு, செப். 22

இலங்கையை அண்மித்த கடற்பரப்பில் பயணிக்கும் சந்தேகத்திற்கிடமான கப்பல்கள் குறித்து உஷாராக இருப்பதற்காக ஐந்து விசேட குழுக்களை கடற்படைத் தளபதி நியமித்துள்ளார்.

சந்தேகத்திற்கிடமான கப்பல்கள் குறித்து 24 மணி நேரமும் விழிப்புடன் இருந்து குறித்த கப்பல்கள் தொடர்பில் கடற்படையின் தாக்குதல் பிரிவுக்கு அறிவிப்பதே இந்தக் குழுக்களின் பொறுப்பென்று

கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் டி. கே.பி. தஸநாயக்க தெரிவித்திருக்கிறார். கடந்த வாரம் முதல் கடலில் கடற்படையின் ரோந்துச் சேவைகள் இரு மடங்குகளாக அதிகரிக்கப்பட்டுள்ளன என கடற்படையின் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

## ஏ-9 வீதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வட பகுதியின் இயல்பு நிலையைப் பேண இது பெரிதும் துணைபுரிந்தது. எனினும் கடந்த மாதம் 11 திகதி முதல் இப்பாதை மூடப்பட்டதால் வடபகுதி மக்கள் பெரும் துன்பத்தை அனுபவிக்கின்றனர்.

பின்வரும் காரணங்களுக்காக இப்பாதை திறக்கப்படவேண்டும்.

* யாழ்ப்பாணத்திற்குத் தேவையான 500 தொன் உணவுப்பொருள்கள் தினமும் 200 லொறிகளில் இப்பாதை வழியாக வந்து சேர்கின்றது. பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் போன்ற எரிபொருள்களும் இப்பாதை வழியாகவே வருகின்றன.
* நோயாளர்கள் இப்பாதையூடாகவே அம்புலன்ஸ் மூலம் மேலதிக சிகிச்சைக்காக வவுனியாவிற்கோ கொழும்புக்கோ அனுப்பி வைக்கப்படுகின்றனர்.
* அரச அலுவலர்கள் ஊ நா.ட ணியாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பணியாளர்கள், அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர் இப்பாதையைப் பயன்படுத்துகின்றனர்.
* விவசாயப் பொருள்கள், அன்றாடம் பிடிக்கப்படும் மீன் போன்ற பொருள்கள் இப் பாதை வழியாகவே கொழும்புச் சந்தைக்கு அனுப்பப்படுகின்றன.
* அன்றாடம் 5 ஆயிரம் மக்கள் பாதை வழியே தென் பகுதிக்கும் வட பகுதிக்கும் பயணம் செய்கின்றனர். இப்போது சுமார் 20 ஆயிரம் மக்கள் இப்பாதை மூடப்பட்டதால் கைவிடப்பட்ட நிலையில் இரு பகுதியிலும் உள்ளனர்.
* சுனாமி இயற்கை அனர்த்த பேரழிவின் மீள் கட்டுமான பொருள்களான மணல், கல், சீமெந்து, இரும்பு என்பன இப்பாதை வழியே கொண்டு வரப்படுகின்றன.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இப்பாதையைத் திறக்கும்படி புலிகளிடம் வேண்டியுள்ளனர். அவர்களும் சம்மதித்துள்ளனர். செஞ்சிலுவைச் சர்வதேச குழுவினர் மேற்படி பாதையினூடான போக்குவரத்தினை மேற்பார்வை செய்வர்.

• எனவே இந்தப் பாதையை பொதுமக்களின் பாவனைக்கு மிக விரைவாக திறக்குமாறு பாதுகாப்பு அமைச்சுக்கு அதிகாரம் வழங்கும்படி மேன்மை தங்கிய தங்களிடம் அவசரமாக வேண்டுகோள் விடுக்கிறோம். - என்று அதில் உள்ளது.

## வடமராட்சி கிழக்கு நிலைகள் மீது கிபிர் குண்டுவீச்சு; ஷெல் தாக்குதல்!

யாழ்ப்பாணம், செப்.22

வடமராட்சி கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகளை நோக்கி இராணுவத்தினர் ஆட்லறி ஷெல் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

முன்னதாக நேற்று வியாழக்கிழமை காலை விமானப் படையின் 'கிபிர்' ஜெட் விமானங்கள் தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி - பளை பகுதிகள் மீது குண்டுகளை வீசின. இதில் பல வீடுகள் சேதமடைந்தன.

தொடர்ந்து நாகர்கோவில் பகுதியில் இரு தரப்புக்கும் இடையே மோட்டார் மற்றும் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றது.

விடுதலைப் புலிகளின் பிரதேசங்களை நோக்கி நேற்று முன்தினம் மாலை 5 மணி முதல் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிவரை தொடர்ச்சியான தாக்குதல்களை இராணுவத்தினர் மேற்கொண்டனர் என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (க)

## எழுதுமட்டுவாளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர் எனவும் படைத் தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் புலி உறுப்பினர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனவும் படைத் தரப்பினர் தெரிவித்தனர். இதனையடுத்து அப்பகுதியில் நேற்றுக் காலை படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட போது உயிரிழந்த புலி உறுப்பினரின் சடலத்தைக் கண்டெடுத்தனர் எனவும் படைத் தரப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

முன்னரங்குப் பகுதியில் இருந்து படையினரே தங்கள் நிலைகள் மீது ஷெல்தாக்குதல்களை நடத்தினர் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

## இந்தியத் தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை -

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களையும், நேற்று சந்தித்தனர்.

இச்சந்திப்புத் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்தியச் செயலாளர் டி.ராஜா கூறியதாவது:-

தற்போது இலங்கையின் நிலைமைகள் தொடர்பாகத் தமிழ் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எமக்குத் தெரிவித்தனர். அப்பாவித் தமிழ்மக்களின் அவலநிலை குறித்தும் எமக்கு எடுத்து விளக்கப்பட்டது.

இன்றைய சூழ்நிலையில் சர்வதேச சமூகம் சும்மா இருக்க முடியாது. மனிதாபிமான அடிப்படையில் உதவிகளை வழங்க முன்வர வேண்டும். அதேவேளை, இலங்கை அரசு தமிழ்மக்களுக்கு எதிரான தாக்குதலை நிறுத்த வேண்டும்; கைவிடவேண்டும். ஓர் அரசியல் தீர்வுக்கு முன்வரவேண்டும். இதனைச் சர்வதேச சமூகம் இலங்கை அரசுக்கு உரிய முறையில் தெரிவிக்க வேண்டும் - என்றும் தமிழ் எம்.பிக்கள் எங்களிடம் கூறினர்.

ஓர் அரசியல் கட்சி என்ற முறையில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாங்கள் தமிழ்க் கூட்டமைப்பினருக்கு எங்கள் நிலைப்பாட்டைத் தெரிவித்தோம்.

உண்மையில் இலங்கைத் தமிழ் மக்கள் படுகின்ற துயரங்களை அறிந்துள்ளோம். அவர்கள் தொடர்பாக அக்கறையும் கவலையும் எங்களுக்கும் இருக்கிறது. ஏனெனில், சமீபத்திய தாக்குதல்களின் காரணமாக, ஏறத்தாழ 14 ஆயிரத்துக்கும் அதிகமான இலங்கைத் தமிழ் மக்கள் அகதிகளாக இந்தியாவுக்கு வந்துள்ளனர். தமிழ்நாட்டில் அவர்கள் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இது இந்தியாவுக்கும் தமிழ்நாட்டுக்கும் கூட ஒரு பிரச்சினையாக மாறியுள்ளது. இந்தச் சூழலில் ஓர் அரசியல் தீர்வுக்காக முயற்சி மேற்கொள்ள வேண்டும். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாங்கள் சொல்லிக்கொள்வதெல்லாம், போர்நிறுத்த உடன்பாட்டை அரசும், விடுதலைப் புலிகளும் முழுமையாகச் செயற்படுத்தவேண்டும். அத்துடன் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் அவர்கள் ஆரம்பிக்கவேண்டும்.

-இவ்வாறு நாங்கள் தெரிவித்தோம் என்றார் டி.ராஜா. (ஐ-12)

## பங்கீடு....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு லீற்றரும் எண்ணை பெறாதோருக்கு இரண்டு லீற்றரும் வழங்கப்படுமென்றும் ஏற்கனவே இரண்டு லீற்றர் எண்ணெய் பெற்றவர்களுக்கு வழங்கப்படமாட்டாது என்றும் கூட்டுறவுச்சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ப-203)

## ஒரு மாதகால....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று வாரத்திற்குப் போதுமானவை என அறிவிக்கப்பட்டது. எனினும் சில ஊடகங்களில் யாழ். மாவட்டத்தில் மூன்று மாதத்திற்குப் போதுமான உணவுப்பொருள்கள் இருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இது தவறானதாகும்.

மேற்குறிப்பிட்ட 3 கப்பல்களிலிருந்தும் யாழ். மாவட்டத்திற்குப் பெற்றுக்கொள்ளப்படவிருக்கின்ற உணவுப்பொருள்கள் மூன்று வாரங்களுக்குப் போதுமானது என்பதே சரியானது என்பதை அறியத்தருகிறேன் - என்று அதில் உள்ளது. (1)

## தமிழர் தாயக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில் எமது மக்கள் அங்கு வாழ்ந்து வருவதனாலும் இப்போதும் பெருமளவு மக்கள் அகதிகளாக அங்கு செல்வதனாலும் இந்திய அரசுக்கு இங்குள்ள யதார்த்தத்தை எடுத்துரைப்பது அவசியமானதாகும்.

அந்த வகையில் தமிழ்க் கூட்டமைப்பினர் தமிழ்நாட்டிலுள்ள தமிழக பிரமுகர்களைச் சந்தித்து இங்குள்ள நிலைமைகளை விளக்கியதுடன் இந்தியப் பிரதமரைச் சந்திப்பதற்கும் தயாராகவிருக்கிறார்கள்.

அந்த வகையில் இந்தியா உட்பட அனைத்து நாடுகளுமே எம்மை மனிதநேயத்துடன் நோக்கி எமது போராட்டத்துக்கு ஆதரவைத் தரவேண்டும். அத்துடன் பெரும் இன அழிப்பில் ஈடுபடும் சிறிலங்கா அரசுக்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்கி ஊக்குவிக்காமல் எமது மக்களின் வாழ்வுரிமைப் போரை அங்கீகரித்து ஆதரிக்கவேண்டுமென்பதே எமது அவா.

கேள்வி: ஒஸ்லோப் பேச்சில் என்ன முக்கியமான விடயங்களை நீங்கள் முன்வைக்கப்போகிறீர்கள்? இந்தப் பேச்சு வெறும் பத்தோடு பதினொன்றுதானா? அல்லது உருப்படியான விளைவுகள் ஏற்படுமா?

• பதில்: ஒஸ்லோப் பேச்சுகள் என ஊடகங்களில்தான் குறிப்பிடப்படுகிறதே தவிர எமக்கு உத்தியோக பூர்வமாக எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. மேலும் பேச்சுக்கானதொரு சூழல் உருவாக வில்லை. ஸ்ரீலங்காப் படைகள் பெரியதோர் இன அழிப்பை நடத்திக்கொண்டிருக்கின்றன. படுகொலைகளும் இடப்பெயர்வுகளும், ஆட்கடத்தல்களும் எனப் பெரும் அவலநிலையை மக்கள் மீது திணித்துக்கொண்டு பேச்சு எனக் கதைப்பது அர்த்தமற்றது. இந்த அவலங்களுக்கு முதலில் தீர்வுகாணப்படவேண்டும்.

இவற்றுக்குத் தீர்வுகாண முயற்சிக்காமல் இழுத்தடிக்கும் சந்தர்ப்பத்தில் பேச்சுக்களைப் பற்றிச் சிந்திக்க முடியாதவர்களாகவே நாங்களிருப்போம்.

கேள்வி: அமைதிப் பேச்சில் நீங்கள் கலந்துகொள்ள உங்களுக்கு நெருக்குதல்கள் ஏதாவது உண்டா?

பதில்: அமைதிப் பேச்சுக்களில் கலந்துகொள்ளும்படி சர்வதேச சமூகம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது. நாங்கள் அமைதிப் பேச்சுக்களைப் புறந்தள்ளவில்லை. அமைதி வழியில், யுத்தமற்ற வழியில் எமது மக்களுக்குத் தீர்வு காண வேண்டும் என்றே எமது தலைமைப்பீடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

ஆனால், அதற்கான அனைத்துச் சந்தர்ப்பங்களையும் அரசு சீர்குலைத்து வருகின்றது. எம்மைப் பொறுத்தவரை அரசு வன்முறைகளை நிறுத்தி ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை நிறுத்தி இதயசுத்தியுடன் பேச்சு மேசைக்கு வருமானால் நாமும் அதற்கான முயற்சிகளில் ஈடுபட லாம்.

ஆனால், இந்த நிலையில் இன்று ஸ்ரீலங்கா அரசு அப்படி இல்லை. அது போர் வெறி கொண்டு பெரும் இன அழிப்பில் இறங்கிவிட்டதால் இதற்கான சாத்தியங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. (ஐ-12)

## அம்பாறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுஷ்டிக்கப்பட்டது.

தென்கிழக்குப் பல்கலைக்கழகச் சமூகமும், அக்கரைப்பற்று வர்த்தகர் சங்கமும் இணைந்து இந்த ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தது.

அக்கரைப்பற்று, அட்டாளைச் சேனை, பாலமுனை, ஒலுவில், கல்முனை, கல்முனைக்குடி, சம்மாந்துறை ஆகிய பிரதேசங்களில் இந்த ஹர்த்தாலினால் அரச, தனியார் நிறுவனங்கள், கடைகள் இயங்கவில்லை. போக்குவரத்துச் சேவைகளும் நடைபெறவில்லை. சம்பவத்தில் உயிரிழந்த மக்களுக்காக இன்று அம்பாறை மாவட்டத்திலுள்ள பள்ளிவாசல்களில் ஜும்ஆத் தொழுகையின் போது விசேட துஆப் பிரார்த்தனையும் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அம்பாறையில் பல்வேறு பகுதிகளிலும் கறுப்பு - வெள்ளைக் கொடிகள் கட்டப்பட்டிருக்கின்றன.

இதேவேளை - பொத்துவில் சம்பவத்தைக் கண்டித்து மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடிப் பிரதேசத்திலும் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அங்கு வீதிகளில் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டன. இயல்புநிலை பாதிக்கப்பட்டிருந்தது. (க)

## லிபர் பூலிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று ஆரம்பமாகும் என்றும்- யாழ் அரச அதிபர் தெரிவித்தார்.

இக்கப்பலில் ஆயிரத்து 875 தொன் பொருள்கள் எடுத்துவரப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (1-79-203)

## படுகொலைகள்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பஸ்தர் ஒருவர் இனம் தெரியாதவர்களின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகிப் பலியானார். காலை 7.15 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பலியானவர் வல்வெட்டித்துறை, தெனியம்பை என்னும் இடத்தைச் சேர்ந்த க.ஆறுமுகதாஸ் (வயது - 35) என்பவர் என்றும் -

தனது வீட்டின் முன்னால் நின்ற வேளையில் மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாதவர்கள் இவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்துவிட்டு தப்பிச்சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பிட்டவரின் சடலம் பொலீஸாரினால் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. (68)

## இணைத் தலைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்முறைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள சூழ்நிலையில் -

வடக்கிலும், கிழக்கிலும் பல பிரதேசங்களில் தமிழ் மக்கள் திறந்த வெளிச்சிறை போன்ற இக்கட்டில் சிக்கியுள்ள நெருக்கடியான சமயத்தில் -

அமைதிப்பேச்சுக்குப் போவதும் அரசுக் குழுவோடு ஒரு மேசையில் அமர்வதும் சாத்தியமற்றவை என்ற தகவல் புலிகளின் தரப்பால் நோர்வேத் தூதுவருக்கு இன்று தெரியப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை -

அமெரிக்கா, ஜப்பான், நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றைக் கொண்ட இணைத்தலைமை நாடுகளின் கடைசிக் கூட்டத்தில் ஆராயப்பட்ட விடயங்களையும், அதன் பின்னான கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விவகாரங்களுக்கு

அப்பால் அங்கு ஆராயப்பட்ட அம்சங்களையும் இன்றைய சந்திப்பின்போது நோர்வேத் தூதுவர் புலிகள் தரப்புக்கு விரிவாக விளக்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எது, எப்படி என்றாலும் உடனடிப்பேச்சை முன்னெடுப்பதற்கான தீடீர் திருப்பம் ஏதும் **(Break - through)** இன்றைய சந்திப்பில் ஏற்பட வாய்ப்பில்லை என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன. (உ)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் [illegible] .361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.09.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org